S.M.Fernando
OPTICIANS
SIGHT TESTED PRESCRIPTIONS ACCURATELY DISPENSED
580, HOSPITAL ROAD, NEAR BANK OF CEYLON JAFFNA.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

கண் வைத்திய நிபுணர்களிடம் சிபார்சு செய்யும் கண்ணாடி களைச் சரியாகத் கொடுப்பவர்கள்.
எஸ்.எம்.பெர்ணண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி, இலங்கை வங்கி அருகாமை யாழ்ப்பாணம்.

சுடர் 5: பிரமோதூத ஆண்டு வைகாசி மீ 03 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால்பிறை 21 (17-05-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்· 88

## 2 இன்ஸ்பெக்டர்கள், 17 பொலீஸார் கல்முனையில் கடத்தப்பட்டனர்

கொழும்பு, மே. 17
கல்முனையில் நேற்று முன்தினம் மாலை உதைபந்தாட்டப் பயிற்சிக்குச் சென்று விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த இரு சப் இன்ஸ்பெக்டர்கள் உட்பட 19 பொலீஸார் தமிழ்ப் போராளிகளினால் கடத்தப்பட்டனர்.

பதினைந்து மணி நேரத்தின் பின்னர் நேற்றுக்காலை அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

கல்முனைப் பகுதியில் போராளிகளின் தனியான முகாம் ஒன்றுக்கு மேற்படி பொலீஸார் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் —

கடந்த மாதம் பொதுக் கூட்டம் ஒன்றில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று குறித்து பொலீஸார் விசாரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

விடுவிக்கப்பட்ட பொலீஸார் பின்னர் பொலீஸ்பகுதியினரால் உடனடியாக அம்பாறைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் -

நடந்த சம்பவங்கள் பற்றி அங்கு வைத்து பொலீஸ் உயரதிகாரிகளினால் அவர்கள் விசாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தினால் கல்முனை, கருவாஞ்சிக்குடிப் பகுதிகளில் நேற்று பதற்றம் நிலவியதாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-2)

### மெயில் ரயில் 4 மணித்தியாலம் தாமதம்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த மெயில் ரயில் நேற்றுக் காலை இயந்திரக் கோளாறு காரணமாக 4 மணித்தியாலங்கள் தாமதமாகவே யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

இதன் காரணமாக நேற்றுக்காலை கொழும்பு நோக்கி சென்ற யாழ்தேவியும் தாமதமாவே சென்றது. (ஒ-3)

## கலா தம்பிமுத்து நேற்று மரணம்

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமுற்றிருந்த திருமதி கலா தம்பிமுத்து நேற்றுக்காலை 5.30 மணியளவில் கொழும்பு ஆஸ்பத்திரியில் காலமானார்.

கடந்த 7ஆம் திகதி கொழும்பு கிறகரி வீதியில் கனடா தூதரக வாசலில் இனந்தெரியாத சிலர் நடத்திய துப்பாக்கி பிரயோகத்தில் அவரது கணவரான சாம் தம்பிமுத்து எம் பி உயிரிழந்தார் என்பதும் —

கலா தம்பிமுத்து படுகாயமுற்றார் என்பதும் தெரிந்ததே.

கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த கலா தம்பிமுத்து நேற்றுக் காலையில் மரணமானார். அவருக்கு வயது 47.

அவரது பூதவுடல் நேற்று ஏ. எவ். றேமன்ஸ் அந்திம கால சேவை நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தது.

இன்று பொரளை கனத்தை மயானத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெறும்.

திருமதி கலா தம்பிமுத்து முன்னாள் செனட்டர் மாணிக்கத்தின் மகள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

"ஒப்பரேஷன் லிபரேஷன்" தாக்குதலில்

## வடமராட்சிப் பகுதியில் சேதமுற்ற 309 வீடுகளைத் திருத்த ரூ.1½ கோடி!

யாழ்ப்பாணம், மே 17
வடமராட்சி "ஒப்பரேஷன் லிபரேஷன்" இராணுவ நடவடிக்கைகளின்போது சேதமுற்ற 309 வீடுகளை ஒரு கோடி 55 லட்சம் ரூபா செலவில் மீள அமைத்துக்கொடுக்க நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்துள்ளது.

பொலிகண்டி, இராசலிங்கம் வீதி, தம்பாளை ஆகிய இடங்களிலேயே இந்த வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

பிரஸ்தாப வீடுகளை அமைக்கும் ஆரம்ப வேலைகளைக் கவனிப்பதற்காக நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த புனரமைப்புப் பிரிவு இலங்கைப் பிரதிநிதி திரு. அரில்கிரான் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

வீடுகள் அமைக்கப்படவிருக்கும் இடங்களை அவர் பார்வையிட்டார்.

அமைப்பு வேலைகள் அடுத்த வாரம் ஆரம்பமாகும். ஒவ்வொரு வீடும் சுமார் 50 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## ஈழத் தமிழ்ப் போராளிகளுக்கு கருணாநிதி இறுதி எச்சரிக்கை!

### தமிழகத்தில் வன்முறை புரிந்தால் கடும் நடவடிக்கை

சென்னை, மே 17
ஈழத்தின் எந்தப் போராளிக் குழுக்களாக இருந்தாலும் அவர்களின் வன்முறைச் செயலுக்கு இடமில்லைஎன்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

அப்படி வன்முறை புரிந்தால் தக்க கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் இறுதி எச்சரிக்கை விடுத்தார்.

ஈழத் தமிழ்ப் போராளிகள் குறித்துச் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே திரு. கருணாநிதி இவ்வாறு தெரிவித்தார்.

ஈழத் தமிழ்ப் போராளிகள் குறித்து செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தவையாவன:-

இலங்கைத் தமிழ்ப் போராளிகள் வன்முறையில் ஈடுபட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் மீண்டும் எச்சரித்தார்.

தமிழ்ப் போராளிக் குழுக்கள் தமிழ்நாட்டில் ஆயுதங்களுடன் நடமாடுவது வன்முறையில் ஈடுபடுவதுபோன்ற செயல்களை மாநில அரசு அனுமதிக்காது. அப்படி ஈடுபடுபவர்கள் உடனே வெளியேற்றப்படுவார்கள்.

எந்தப் போராளிக் குழுக்களாக இருந்தாலும் தமிழ்நாட்டில் அவர்களின் வன்முறைச் செயலுக்கு இடமில்லை என்பதை நான் மீண்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### தஞ்சாவூரில் கவிழ்ந்த ஜீப்!

சென்னை, மே 17
கடந்த செவ்வாய்க்கிழமை தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழ்ப் போராளிகள் பயணம் செய்த ஜீப் ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது.

இது பற்றிய வேறு தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. (அ-எ)

## போராளிகளை அகற்ற கலைஞர் இராணுவ உதவி கேட்டிருக்கிறார்!

சென்னை, மே 17
தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் இருந்து தமிழ்ப்போராளிகளை அப்புறப்படுத்தும் வகையில் மத்திய அரசிடம் இருந்து இராணுவ உதவியை முதலமைச்சர் கருணாநிதி கோரியிருக்கிறார்.

இப்படி பி. ரி. ஐ. செய்தி ஒன்று தெரிவித்தது.

இதேவேளை தமிழ் நாட்டின் கடற்பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துமாறு மத்திய அரசை தமிழ்நாடு அரசு கேட்டுள்ளது.

கடலோரக் காவற்படை, கடற்படை என்பவற்றின்கண்காணிப்பை கரையோரங்களில் முடுக்கிவிடுமாறும்--

மாநில காவல் துறையினருக்கு அதிநவீன ஆயுதங்களைக் கையாள்வதில் பயிற்சி அளிக்கவேண்டும் எனவும்--

மத்திய அரசிடம் தாம் கேட்டுக்கொண்டுள்ளதாக தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி அறிவித்தார் என்று மற்றொருசெய்தி தெரிவித்தது.

மாநில அரசின் தலைமைச் செயலாளர் திரு.எம்.ராஜேந்திரன் மத்திய அரசு அதிகாரிகளுடன் இதுவிடயமாகத் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-எ-ப)

தலவாக்கலையில் பதற்றம்

# மலையக மக்கள் மீது நேற்று பொலிஸ் தடியடி!

## 3 பெண்கள் உட்பட 6 பேர் காயம்

— உதயன் நுவரெலியாச் செய்தியாளர் —

நுவரெலியா, மே. 17
தலவாக்கலைப் பகுதியில் நேற்றுப் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது!

ஆர்ப்பாட்ட ஊர்வலம் செல்ல முயன்ற தொழிலாளர்கள் மீது பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்தனர். அதனால் அறுவர் காயமுற்றனர். அவர்களில் மூவர் பெண்கள்!!

இதேவேளை நேற்று தலாவக்கலைப் பகுதியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பல்லாயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். பாடசாலை மாணவர்களும் வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர்.

தொழிற்சங்கத் தலைவர் திரு. சந்திரசேகரன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதை அடுத்தே தலவாக்கலைப் பகுதியில் இந்த அசம்பாவிதங்கள் ஏற்பட்டன.

*ஒரு லட்சம் மலையகத் தமிழரை இந்தியாவுக்கு அனுப்பவேண்டும் என்ற அமைச்சர் ரஞ்சனின் நிலைப்பாட்டை எதிர்த்து திரு. சந்திரசேகரம் பிரசாரம் செய்து வந்தார் என்றும்—*

*அதனை அடுத்தே அவரை இராணுவத்தினர் கைது செய்து விடுவிக்காமல் வைத்துள்ளனர் என்றும் — சந்தேகிக்கப்படுகிறது*

*ஒருலட்சம் தமிழர் விவகாரம் மலையகத்தில் பெரும் பிரச்சினையாக உருவெடுப்பதற்கான ஆரம்ப அறிகுறிகள் இவை என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்!!!*

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் திரு. சந்திரசேகரன் நேற்று முன்தினம் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டதாக செய்திகள் வெளியாகின. கொழும்பிலிருந்து வந்த உத்தரவை அடுத்துஅவர் கைது செய்யப்பட்டார்என்று வேறுசெய்திகள் தெரிவித்தன அதனையடுத்து நேற்று தலவாக்கலைப் பகுதியில எல்ஜின், மரயா, லிந்துல, அக்கரைப் பத்தனைப் பகுதி தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்தனர். தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய மாணவர்களும் தது வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர்

### தடியடிப் பிரயோகம்

பகிஷ்கரிப்பில ஈடுபட்ட மாணவர்களும் வேலை நிறுத்தத்தில் குதித்த தொழிலாளர்களும் காலையில் தலவாக்கலை நகரப் பகுதியில் கூடி ஆர்ப்பாட்டம் செய்ய முயன்றனர் ஆனால் பொலிஸார் அவர்களைத் தடியடிப் பிரயோகம் செய்து கலைத்தனர்.

பொலிஸாரின் தடியடிப் பிரயோகத்தினால் படுகாயமுற்றமூன்று பெண்களும் மற்றும் மூவரும் உடனடியாக கொட்டகல அரசினர்ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

ஆனால் அங்கு அவர்களுக்குச் சிகிச்சையளிக்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டதாகவும்--

பின்னர் தனியார் ஆஸ்பத்திரிகளில் அந்த அறுவரும் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் கூறப்பட்டது.

திரு. சந்திரசேகரன் பாதுகாப்பாக விடுவிக்கப்பட வேண்டும் என்று, மலையக மக்கள் முன்னணித் தலைமை

(5 ஆம் பக்கம் பார்க்க)



கைது செய்யப்பட்ட சந்திரசேகரன்



### முச்சந்தி முரளி

அப்ப மலையகத்திலை ஒரு பூகம்பம் வெடிக்கிறதுக்கு உது ஆரம்ப அறிகுறி எண்டு சொல்லுங்கோ......!

## வடக்கு - கிழக்கில் நடத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 17
வடக்கு- கிழக்கு மாகாணத்திற்கு நிர்வாக அதிகாரிகளைத் தெரிவு செய்யும் போட்டிப் பரீட்சையை யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் நடத்த வேண்டும் என்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுச் செயலாளரை அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் கோரியுள்ளது.

கொழும்பிலேயே இந்தப் பரீட்சை நடைபெறவிருப்பதாக முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (அ-3)

## 50 ஆயிரம் தொழிலாளர்கள் நேற்று வேலை நிறுத்தம்

### ஏனைய இடங்களுக்கும் பரவலாம்

கொழும்பு, மே 17
பொலீஸாரால் கைது செய்யப்பட்ட மலையக மக்கள் முன்னணித்தலைவர் திரு சந்திரசேகரனை விடுதலை செய்யக் கோரி மலையகத் தோட்டங்களில் சுமார் 50 ஆயிரம் பேர் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர் என ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

எதற்காக திரு. சந்திரசேகரன் கைது செய்யப்பட்டார் என்பதற்கு பொலீஸார் விளக்கம் கொடுக்கவில்லை என்று மலையக மக்கள் முன்னணிப் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

இதேவேளை நேற்று தலவாக்கலையிலும் அதன் சுற்றுப்புறங்களைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் சுமார் 25 ஆயிரம் பேர் வேலை நிறுத்தம் செய்ததாக எமது நுவரெலியா செய்தியாளர் அறிவித்துள்ளார்.

தலவாக்கலையில சுமார் 11,500 தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர் என்றும் ஏனைய பகுதிகளில் சுமார் 15 ஆயிரம் பேர் வேலை நிறுத்தத்தில குதித்தனர் என்றும் மதிப்பிடப்பட்டது.

வேலை நிறுத்தம் இன்று வியாழக் கிழமை ஹட்டன், மஸ்கெலியா, நுவரெலியா ஆகிய இடங்களுக்கும் பரவலாம் என அறிய வருகிறது. (அ எ 58)

## தேனிசை நிகழ்ச்சி நாளை நெல்லியடியில்

நாளை பி. ப. 5 மணியளவில் நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிதமிழீழ விடுதலைப் புலிகளின் கலை கலாச்சாரப் பேரவை ஆகியவற்றின் அனுசரணையுடன் பிரபல இசைக் கலைஞர் தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியும் கலைவிழாவும் நடைபெறும். (உ-168)

### சுப நேரம்

17 - 5 - 90
வியாழக்கிழமை வைகாசி 03
சுபநேரம் :
7.23 - 8.53
இராகுகாலம்
01·23 - 02.53
இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

### சூறாவளி மரணம் 598 ஆக உயர்வு

ஹைதராபாத். மே 17
ஆந்திர மாநிலத்தில் சூறாவளி காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 598ஆக அதிகரித்தது. (ஒ-எ)

போதனா ஆஸ்பத்திரி விடயம்:

## வைத்திய பணிப்பாளருக்கு அறிவித்தல் ஏதும் இல்லை!

யாழ் மருத்துவ பீடத்துடன் இணைந்ததான போதனா வைத்தியசாலை ஒன்றை அமைப்பது தொடர்பாக உத்தியோகபூர்வமானகடிதம் எதுவும் எனக்கு கிடைக்கவில்லை- இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி. பு சண்முகம் நேற்றுத் தெரிவித்தார்.

போதனா வைத்தியசாலை அமைப்பது சம்பந்தமாக வைத்தியபீடமும், யாழ்- போதனா வைத்தியசாலை நிர்வாகமும் கூட்டாகக் கோரிக்கை விடவேண்டும் என்று கொழும்பில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

இது சம்பந்தமான கடிதம் ஏதும் கிடைத்தால் யாழ் ஆஸ்பத்திரி இணைப்புக்குழு உடனடியாகக் கூடி அதுபற்றி ஆராய்ந்து முடிவை எடுக்கும் என்றும் அவர் சொன்னார். (உ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளைதிறனுடைய பம்பாய் வெங்காய விதை (புதிய இறக்குமதி) விற்பனைக்குண்டு. பிள்ளையார், 259. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3451)

### விற்பனையாகிக் கொண்டிருக்கிறது

சோதிட மலர் (வைகாசி இதழ்) [15- 05- 90]இம்மாத பலன், சோதிட அறிவுப் போட்டி,வெளிநாட்டு வாய்ப் புண்டா? மற்றும் வழக்கமான எல்லா அம்சங்களுடனும் வெளிவந்து விட்டது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [3464]

### A/L CHEMISTRY

பல் தெரிவு வினாக்கள் மூலம் பொது இரசாயனம் பௌதீக இரசாயனமும் (G.C.E. A/L வகுப்புகளுக்குரியது) by ம. செல்வரத்தினம் B Sc. இராஜேஸ்வரி மகேஸ்வரன் A/L Chemistry பரீட்சைக்குரிய மிக முக்கிய தகவல்களை உள்ளடக்கியது. விலை ரூபா 75/- வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-4493)

### தேவை

கற்பூரம் அடிப்பதில் அனுபவம். உள்ளவர்களும், பழக விரும்புகிறவர்களும், நேரில் வரவும் குசாதேவி இன்டஸ்ரீஸ், ப. நோ கூ. ச கிளை முன்பாக, அல்லாரை தெற்கு, மீசாலை. (3473)

### மணமகள் உடன் தேவை

யாழ். இந்து வேளாள குல 25 வயதுடைய டென்மார்க் இல் பணிபுரியும் சிறந்த வருமானமுள்ள ஏக புத்திரனுக்கு அழகும், கல்வியாற்றலும் உள்ள பிறப்பு எண் 3 அல்லது 6, 9 உள்ள 25 வயதிற்கு குறைவான மணமகள் தேவை ஜாதக,சீதன விபரங்களுடன் தொடர்பு: C/o 695, உதயன், கல்யாண முகவர்களும் தொடர்பு கொள்ளலாம். (3465

### மணமகள் தேவை

கனடாவில் நிரந்தரமாக வசிப்பவரும், விவாகரத்துச் செய்தவரும் வேளாள கத்தோலிக்க இரு பிள்ளைகளின் தந்தையும் 42 வயதுடைய ஒருவருக்கு கல்யாணமாகாத அல்லதுவிதவையான ஏறக்குறைய 35 வயதுடைய கத்தோலிக்க அல்லது இந்து வேளாள குல மணமகள் தேவை. கனடா செல்ல வேண்டும். விபரங்களுடன் 22- 05- 90க்கு முன்பாக விண்ணப்பிக்கவும். C/o உதயன் 123. [13082]

### வீடு வாடகைக்கு

யாழ். பல்கலைக்கழக சுற்றாடலில் சகல வசதிகளும் கொண்ட வீடு உடன் வாடகைக்கு உண்டு. தொடர்பு:- A P குலசிங்கம், 75, கஸ்தூரியார் வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். நேரம்:-பி.ப 2 00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை (3474)

### முதலிடம்

கோப்பாய் மே 17

கோப்பாய் வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் நீல இல்லம் முதலிடத்தை பெற்றுள்ளது. (இ-72)

## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக அச்சகம் ஒன்றை பொறுப்பேற்று இயக்கக்கூடிய அனுபவம் நிறைந்த அச்சக சுப்பிரின்டன்ட் (Printing Superintendent) ஒருவர் தேவை.

அச்சகத் துறையில் போதிய பயிற்சியும் வெவ்வேறு பிரிவுகளை இணைத்து உற்பத்தியை பெருக்கும் விதத்தில் வேகமாகவும், செயற்திறனுடன் பணியாற்றக்கூடிய ஆளுமையும் நிறைந்தவர்களுக்கு கவர்ச்சிகரமான வேதனம் வழங்கப்படும்.

பூரணமான சுயவிவரங்களுடன் 25-05-1990 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கவும்.

இல: 200
C/o/பா உதயன்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# போராளிகளைப் போன்று நினைவு கூரத்தக்கவர் ஜக்குலின்

## பிரான்ஸ் டாக்டரின் சேவைக்கு பாராட்டு

பருத்தித்துறை, மே 17

'போராளிகளுக்கு நினைவுத் தூபி எழுப்புவது போல, இறந்த போராளிகளின் நினைவாக படங்களை வீதிகளில் வைத்து நினைவு கூருவது போல பிரான்ஸ் சென் சிலுவைச் சங்க இணைப்பாளர் செல்வி ஜக்குலினின் சேவையை வடமராட்சி மக்கள் நினைவு கூறவேண்டும்'

பருத்தித்துறை, முன்னாள் பிரஜைகள் குழுத்தலைவர் திரு. எஸ். விசாகசுந்தரம் இப்படிக் கூறினார். இந்த சேவை நலன் பாராட்டு விழா பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி திரு. எஸ். கதிரைவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்றது

யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. வி. கே. கணேசலிங்கம் பேசியதாவது:

எமது மண்ணில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் இந்த மண்ணிலுள்ள தமிழ் மக்களுக்குச் சேவை செய்ய பின் நிற்கிறார்கள்.

விரிவுரையாளர்கள் பேராசிரியர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள்போன்ற புத்திஜீவிகள் பணம் சம்பாதிக்கும் நோக்கமாக மேலைத்தேசங்களுக்கு செல்கிறார்கள். பின்பு தாய் மண்ணுக்குத் திரும்பாமல் அங்கேயே தங்கி விடுகிறார்கள்.

இந்நிலையில் இந்தத் தமிழ் மக்களுக்குச் சேவை புரிய பல்லாயிரக்கணக்கான மைல் தொலைவிலிருந்து வந்துள்ள துணிச்சல் மிக்க இளநங்கை தான் செல்வி ஜக்குலின்.

பிரான்ஸ்வைத்திய சேவைக் குழுவின் வைத்திய சேவைகள் எமது போராட்ட வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. இக்குழுவின் சேவையால் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையும் பல்வேறு அபிவிருத்திகளைப் பெற்றுள்ளது

'இந்திய இராணுவ அடாவடித்தனங்கள் வடமராட்சிப் பகுதியில் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தபோது வடமராட்சிப் பகுதிக்கு பிரான்ஸ் வைத்திய சேவைக் குழுவினது சேவை கிடைத்தது எமது வரப்பிரசாதமாகும்.

இப்படி அவர் கூறினார். அடுத்து செல்வி ஜக்குலின் பதிலுரையின் போது'' இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்குச் சேவையாற்றுவதற்காகவே எமது வைத்தியக் குழு வந்தது. தமிழ் மக்கள் முழுமையான பயன்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டே செயற்பட்டேன். இச் செயற்பாட்டில் திருப்தி அடைந்து கொண்டேன் என்றார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபைச்செயலாளர் திரு. கே. வி. செல்வராஜன் அபிவிருத்திச் சபைச் சார்பில் பனைவள அழகு பாவனைப் பொருள்களைச் செல்வி ஜக்குலினுக்கு அன்பளிப்புச் செய்தார்.

அபிவிருத்திச்சபைத் துணை செயலாளர் திரு. எஸ் எ. ஞானச்சந்திரன் நன்றியுரை கூறினார்.

பருத்தித்துறை புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலை மன்ற மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் கலைஞர்அருள் தாஸின் ''அகதிகள்'' நாடகமும் இடம்பெற்றன.

[இ-118)

## கேள்விப் பத்திர அறிவித்தல்

### நீர்ப்பாசனத் திணைக்களம் கிளிநொச்சிப் பிரிவு

1990 - 04 – 20 ஆம் திகதியிடப்பட்டுப் பிரசுரிக்கப்பட்ட கேள்விப்பத்திர அறிவித்தலில் கொடுக்கப்பட்ட கீழ்க்காணப்படும் புனருத்தாபன உதவித்திட்ட வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் கேள்விப்பத்திர சபைத் தலைவர் பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் கிளிநொச்சியினால் பெற்றுக் கொள்ளும் திகதி 14 – 05 – 1990 ஆந் திகதி தொடக்கம் 28 – 05 – 1990 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. கேள்விப்பத்திரங்கள் அவரால் 30 – 05 – 1990 ஆந் திகதி காலை 10 00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். மேலதிக விபரங்களை நீர்ப்பாசனப் பொறியியலாளர் கிளிநொச்சிப்பிரிவில் வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

| | பதிவுத் தொகை: நீர்ப்பாசன இலாகா | பதிவுத் தொகை: மற்றும் திணைக்களம் | கேள்விப்பத்திர வைப்புப்பணம்: மீளளிக்கக் கூடிய | கேள்விப்பத்திர வைப்புப்பணம்: மீளளிப்பு செய்யப் படாத |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 1 எமர்சன் வீதி, கல்பதித்துத் தார் போடுதலும் | 500,000 | 1500,000.00 | 250 00 | 100.00 |
| 2. இரணைமடுசேவை வீதி, கல் பதித்துத் தார் போடுதல் | 400 000 | 1200,000 00 | 250 00 | 100.00 |
| 3. ரெனடி வீதி கல்பதித்துத் தார் போடுதலும் நடை பாதை சீர்செய்தலும் | 400,000 | 1200,000.00 | 250 00 | 100 00 |
| 4. இரணைமடு திட்டத்தின் கீழ் மூன்று இடங்களில் நீர்த் தடுப்புப் போக்கிகள் அமைத்தல் (மூன்று வேலைகள்) | 50,000 | 1150,000 00 | 250 00 | 100.00 |

எந்திரி. என். ஜே. நவரட்ணராஜா
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கிளிநொச்சிப் பிரிவு

315, கண்டி வீதி,
பரந்தன்.
1990 - 05 – 02

[சி–4521]

# குடும்பநலத் திட்ட வெற்றி மக்களில் தங்கியிருக்கிறது

## பொம்மை வெளிக் கூட்டத்தில் உரை

''குடும்ப நலத் திட்டம் வெற்றி பெறுவது மக்களின் பங்களிப்பில் தங்கியுள்ளது. இந்த விஷயத்தில் முஸ்லீம் மக்கள் ஆர்வமான ஒத்துழைப்பைத் தருகின்றார்கள். இது பாராட்டுக்குரியது.''

இலங்கைக் குடும்பத் திட்டச் சங்கத்தின் யாழ்ப்பாண செயலாளர் திரு. எஸ். எம். சேதுகாவலர் மேற்கண்டவாறு கூறினார்.

பொம்மை வெளியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற குடும்பத் திட்டச் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

திரு. எஸ் எம். யூனூஸ் தலைமை வகித்த இக்கூட்டத்தில் மேற்படி சங்கத்தின் யாழ். முகாமையாளர் திரு. அன்பானந்தன், யாழ். மாநகரசபை சுகாதாரப் பரிசோதகர் திரு. பெ. துரைராசா முதலியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

திரு. பெ. துரைராசா உரை நிகழ்த்திய போது, ''தம்பதியர் தமக்கு விருப்பமான இலகுவான முறைகளைத் தேர்ந்தெடுக்கலாம். எத்தனை பிள்ளைகள் வேண்டும் என்பது பற்றி அவர்களே தீர்மானிக்கலாம். பிள்ளைகளின் வயது இடைவெளியைக் கூட்ட வேண்டும்'' என்று கூறினார்.

யாழ் குடும்பநலத் திட்ட முகாமையாளர் திரு. அன்பானந்தன் தாய் சேய் நலம் பற்றிய கருத்துக்களை இக் கூட்டத்தில் எடுத்துரைத்தார்.

கூட்ட இறுதியில் குடும்ப நலத் திட்டத்தை அனுசரித்த 40 தாய்மாருக்கு போஷாக்குள்ள சத்துணவுப் பார்சல்கள் வழங்கப்பட்டன.

(க- 18)

## தேவை

கிளிநொச்சிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் உதயன், சஞ்சீவி பத்திரிகைகள் விநியோகிப்பதற்கு சொந்த மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எமது கிளிநொச்சி காரியாலயத்தில் பணிபுரிவதற்கு ஒரு அலுவலக உதவியாளரும் (Office Peon) தேவை.

23-05-1990 க்கு முன்பாக தகைமை, மற்றும் நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

கிளிநொச்சியில் நிரந்தரமாக வசிப்பவர்களும், பிணைப்பணம் செலுத்தக் கூடியவர்களும் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

ஆளணி முகாமையாளர்,
நியூ உதயன் பப்ளிக்கேஷன்
பிறைவேற் லிமிடெட்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## தேவை

பின்வரும் பதவிகளுக்கு ஆண்கள் மட்டுமே தேவை.

1. இயந்திர இயக்குநர்
2. அச்சுக் கோர்ப்பாளர்
3. பைண்டர்ஸ் [Binders]

அத்துடன் மேற்படி பதவிகளுக்கான பயிலுநர்களும் தேவைப்படுகின்றனர் எனவே சேரவிரும்புவோர் கல்வி, நற்சாட்சிப் பத்திர மூலப்பிரதிகளுடன் நேரில் வரவும்-

முகாமையாளர்,
உதயன்
15. 2 ஆவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி–4519]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### பொன்னையா செல்வரத்தினம் J.P.

அவர்கள்

(இளைப்பாறிய தொல்பொருள் ஆய்வாளர்)

மண்ணக மலர்வு: 02 – 10 – 1923
விண்ணக நிறைவு: 17 - 05 - 1989

திதி: 04 — 06 — 1990

நீங்கள் எம்மைப் பிரிந்து ஆண்டொன்று
ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாது
தங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

ஆலங்குளாய்,
சண்டிலிப்பாய்.

[13073]

## டிப்ளோமா மனைப்பொருளியல்

## DIPLOMA IN HOME ECONOMICS

- ★ கேக் ஐசிங்
- ★ சமையற் கலை (கீழைத்தேய, மேலைத்தேய உணவு வகைகள் சிற்றுண்டிகள், குளிர் பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள் புடிங் வகைகள் தயாரித்தல்)
- ★ தையற் கலை (சிறுவர், சிறுமியர் முதல் பெரியவர்கள், மகளிருக்கான உடைகள் தயாரித்தல்)
- ★ கூந்தல் அலங்காரம் (கொண்டை வகைகள், மணப் பெண் அலங்காரம் மற்றும் விக் தயாரித்தல்)
- ★ கை வேலை (மக்ரமி, நூல் வேலை, வைக்கோல் வேலை, துணிகளில் பொம்மைகள் உருவாக்குதல்)
- ★ பூ வேலை (கடதாசியிலும், துணிகளிலும் மலர்களை உருவாக்குதல்)
- ★ வரைதலும் வர்ணம் தீட்டுதலும் (கண்ணாடியிலும், சாடியிலும் துணிகளிலும்)
- ★ கோலங்கள் போடுதல்

- ★ பயிற்சிக் காலம் 6 மாதங்கள்
- ★ பயிற்சிகள் ய வும் திங்கள், புதன் ஆகிய தினங்களில் காலை 8 30 மணி முதல் பி ப 1 30 வரை நடைபெறும்
- ★ தொழில் புரியும் பெண்களின் வசதிக்காக ஞாயிற்றுக்கிழமை வகுப்புக்களும் காலை 8 00 மணி முதல் மாலை 3 00 மணிவரை நடைபெறும்.
- ★ பயிற்சியின் முடிவில் அங்கீகரிக்கப் பெற்ற Diploma சான்றிதழ் வழங்கப்படும்.

விபரங்கட்கு:

### கலாலயா

பதிவு இல. 16020
விக்டோரியா வீதி,
(ஆஸ்பத்திரியின் பின்புறம்)
யாழ்நகர்.

[சி-5040]

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு அரசுக்கே கூடுதல் பங்கு

கொழும்பு, மே 17

வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புப் பெற்றுக் கொடுப்பதில் தொண்ணூறு சதவீதமான பங்கை இனி அரசாங்கமே மேற்கொள்ளும்.

இதற்கான புதிய திட்டம் ஒன்றை அரசு விரைவில் அறிவிக்கும் என்று தொழில் அமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா தெரிவித்தார். [ப–எ]

### பகவான் சாயீயின் வழியை ஊக்குவித்த ஞானசேகர ஐயாவின் அமரத்துவம்

16 - 05 – 90 புதன் கிழமை காலை எங்கள் குரு ஞானசேகரம் ஐயா அவர்கள் அமரத்துவம் எய்தியுள்ளார். இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

(3583) சாயி அடியார்கள்.

## ஜனசக்தி விளையாட்டு கழகம்

ஜனசக்தி விளையாட்டு கழக ஆதரவுடன் தேவராணி முருகதாஸ் (பேபி) ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான சுற்றுப் போட்டிகள்.

உடுவில் வலி தெற்கு, தெல்லிப்பளை வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்குட்பட்ட கழகங்கள் பங்குபற்றலாம்.

ஆண்களுக்கான கரப்பந்தாட்டம், பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் நடத்தப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி 30 – 05 – 1990

தலைவர்
ஜனசக்தி விளையாட்டு கழகம்
மயிலணி வடக்கு,
சுன்னாகம்.

[13203]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல்.

**பொருள்:**

நாணமும் நல்ல ஆண்மையும் முன்பு பெற்றிருந்தேன்; (காதலியைப் பிரிந்து வருகின்ற) இப்போது காமம் மிக்கவர் ஏறும் மடலையே உடையேன்.

**உதயன்**

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288

17 - 05 - 1990 த. பெ இலக்கம் 25

# இரு கருத்துகளுக்கு இடமில்லை

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கெனத் தனியான போதனா வைத்தியசாலை ஒன்றை நிறுவுவது தொடர்பாக இன்னும் தீர்க்கமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. பல வருடங்களாக கோரிக்கை மட்டத்தில் இருக்கும் இந்த விவகாரத்துக்கு, கடந்த திங்கட்கிழமை ஓர் ஆக்கபூர்வமான முடிவு கிடைக்கும் என்று சம்பந்தப்பட்ட தரப்பினர்களும், இது விடயத்தில் அக்கறை உள்ள நலன் விரும்பிகளும் எதிர்பார்த்தார்கள். ஆனால் திட்டவட்டமான முடிவு எதுவும் இன்றி மேலும் தாமத நிலைக்கே அது தள்ளப்பட்டுள்ளது!

சரியாகச் சொல்வதானால் கொழும்பில் உள்ள உயர் அதிகாரிகள் வெகு சாதுரியமாகப் பந்தை யாழ்ப்பாணத்தில் உள்ள அதிகாரிகள் பக்கத்துக்குள் போட்டிருக்கிறார்கள்! எந்த விடயத்திலும், கொழும்பு அதிகாரிகள் தாம் ஒரு முடிவை எடுத்துவிட்டு, அதனை மாகாண, பிராந்திய, மாவட்ட மட்டத்தில் உள்ளவர்களிடம் திணிப்பது தான் வழக்கம். ஆனால் யாழ். மருத்துவ பீடத்துக்கெனப் போதனா வைத்தியசாலை நிறுவும் விடயத்தில் தாம் தாராளமாக நடந்து கொள்வதாகக் காட்டிக்கொண்டு, யாழ்ப்பாண அதிகாரிகள் தலையில் கட்டி அடித்திருக்கிறார்கள்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகிகளும், யாழ். பெரியாஸ்பத்திரி நிர்வாகிகளும் கூட்டான கோரிக்கை ஒன்றை முன் வைத்தாலே புதிய போதனா ஆஸ்பத்திரியை நிறுவுவது குறித்துத் தீர்க்கமாக முடிவு செய்ய முடியும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

வழமையிலேயே தமிழர்கள் ஒரு காரியத்தை ஒன்றுபட்டுச் செய்யமாட்டார்கள். எந்தப் பக்கத்தாலோ ஒருவர், சிலர், குறுக்கே இழுப்பார்கள். ஒவ்வொருவரும் தமது எண்ணத்தை வலியுறுத்தி, தாம் மேலோங்கி நிற்க முயல்வார்கள். ஆகையால் யாழ்ப்பாண நிர்வாகிகள் மட்டத்தில் ஒரு கூட்டுக் கோரிக்கை வருவது என்பது கஷ்டமான விடயம். அந்த வகையில் இது விடயம் மேலும் இழுபறிப்படட்டும் — என்று கொழும்பு அதிகாரிகள் நினைத்தார்களோ என்னவோ! அவர்கள் அப்படி நினைத்திருந்தால் அதற்குக் காரணகாரியம் இல்லாமல் இல்லை என்று நாம் அறிகிறோம்.

புதிய போதனா வைத்தியசாலை ஒன்று எதற்காக? இப்போது உள்ளதை அபிவிருத்தி செய்தால் போதாதா? என்ற கருத்து இங்குள்ள சில உயர் அதிகாரிகளிடம் உண்டாம். பல்கலைக்கழகத்துக்கெனத் தனியான போதனா ஆஸ்பத்திரி அமைந்து விட்டால், இப்போதைய ஆஸ்பத்திரியின் மவுசு குறைந்து விடும்; தரம் குறைந்து முந்திய நிலைக்கு வந்துவிடும்; (அதனால் பதவிகளும் மாறிவிடும்) மத்திய அரசின் கவனிப்புக் குறைந்து விடும் என்று கவலை காட்டுவோர் இருக்கிறார்களாம். இதனை அறிந்து தான் கொழும்பு மட்ட அதிகாரிகள் பந்தை இங்கே வீசியிருக்கிறார்கள் என்று அனுமானிக்க வேண்டியுள்ளது.

எந்த விடயத்திலும் இரண்டு கருத்துக்கு இடமுண்டு. ஆனால் மக்கள் நலன் நாடியே கருத்து முடிவாக மாற்றப்பட வேண்டும். ஒவ்வொருவரும் தாம் பிடித்த முயலுக்கு மூன்றுகால் என்று நிலைநாட்ட முயன்றால் காரியம் ஆகாது.

யாழ்ப்பாண மாவட்ட மக்களின் சனத்தொகைக்கு ஈடு செய்யக்கூடியதாக, வேண்டிய வசதிகள் கொண்ட ஆஸ்பத்திரிகள் போதா என்பது எல்லோரும் ஒப்புக்கொண்ட விடயம். 500 படுக்கை வசதிகளைக்கொண்ட யாழ் பெரியாஸ்பத்திரி யாழ். நகர்ப்பகுதி மக்களின் வைத்தியத் தேவையை நிறைவேற்றவே போதுமானதல்ல. அவ்வாறிருக்க அது வடமாகாணம் முழுவதற்குமான பெரியாஸ்பத்திரியாக உள்ளது.

அங்கு அனுமதிக்கப்படும் நோயாளர்களில் அரைவாசிப் பேர் தரையில் தங்கியிருந்து, பெரும் வசதியீனங்களின் மத்தியில் சிகிச்சை பெறுவது நாளாந்தக் காட்சி, வார்ட்டுகளுக்கு உள்ளே நடைபாதைகளில் கூட, நோயாளர்கள் தங்க வைக்கப்படுவதைக் காண முடிகிறது அதனால் கட்டிலில் உள்ள நோயாளிக்கும் வசதியீனம்; தரையில் உள்ள நோயாளிக்கும் நரகலோகம் என்ற நிலை.

இத்தகைய இட நெருக்கடி மிகுந்த நிலையில் புதிதாக ஒரு ஆஸ்பத்திரி யாழ்ப்பாணத்திற்குத் தேவைப்படுகிறது. அதனைப் பல்கலைக்கழகத்துக்கு அருகில் நிறுவினால் இரு நோக்கங்களை எய்துவதாக இருக்கும். நோயாளருக்கு வசதியான சிகிச்சையும், மாணவருக்கு நிறைந்த போதனை வசதியும் கிடைக்கும்

எப்படி எப்படித் தான் இப்போதுள்ள வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதானாலும் பிந்தியதிட்டப்படி மேலும் 500படுக்கை வசதிகளையே செய்யமுடியும் ஆனால் புதிய போதனா வைத்தியசாலையை 1,500 படுக்கை வசதியுடன் 300 கோடி ரூபா செலவில் அமைக்க கொழும்பில் உள்ள சுகாதார அமைச்சின் செயலாளர் பச்சைக் கொடி காட்டியிருக்கிறார்.

இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி யாழ். மருத்துவ பீடத்துக்குப் புதிய போதனா வைத்தியசாலை அமைக்கக் கூட்டுக்கோரிக்கை தாமதமின்றி முன்வைக்கப்பட வேண்டும். பல்கலைக்கழக - பெரியாஸ்பத்திரி நிர்வாகிகள் உடனடியாகக் கலந்தாலோசித்து ஒரு வாரத்திற்குள் கூட்டுக் கோரிக்கையை சுகாதார அமைச்சிடம், பல்கலைக்கழக மானியக் குழுவிடம் முன் வைக்க வேண்டும்.

இதில் இரண்டு கருத்துகளுக்கு இடமில்லை. மக்கள் நலன் நாடி ஒரே ஏகமனதான முடிவு எடுக்கப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம். இது இன்று நாளைக்கான விடயமல்ல. சந்ததி சந்ததியாக மக்களுக்கும் மாணவருக்கும் நற்பயனைத் தரக் கூடிய திட்டம். இது விடயத்தில் உடன் செயற்பட்டு கைக் கெட்டியதை வாய்க் கெட்டச் செய்ய வேண்டும். இல்லையேல் பல சந்ததிகளின் பழி சுமத்தலுக்கு ஆளாக நேரிடும் என எச்சரிக்கிறோம்.

## அம்பாறையில் கண் சிகிச்சை முகாம்

அம்பாறை, மே 17

அம்பாறை மாவட்டத்தில் சுகாதாரத்திணைக்களத்தின் அனுசரணையுடன் இலவச கண்சிகிச்சை முகாம்கள் நடத்தப் படவிருக்கின்றன.

இன்று 17 ஆம் திகதி நான்கு இடங்களில் இந்த சிகிச்சை முகாம்கள் நடத்தப் படவுள்ளன.

கொழும்பிலிருந்துவரும் 33 பேரடங்கிய வைத்தியக்குழுவினரே இந்த முகாம்களில் சிகிச்சை அளிக்கவுள்ளனர்.

கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, அம்பாறை ஆகிய இடங்களிலுள்ள பிரதான வைத்தியசாலைகளில் சிகிச்சை முகாம்கள் நடைபெறும். (இ - 14)

### பாடசாலை மாணவர்களுக்கு

# முத்திரை வழங்கும் வேலைகள் உதவி அரச அதிபர் பொறுப்பில்

## அமைச்சு செயலாளர் சுற்று நிருபம்

யாழ்ப்பாணம் மே 17

பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவுக்குப்பதிலாக முத்திரை வழங்கும் வேலைகளுக்கு உதவி அரசாங்க அதிபர்களே பொறுப்பாக இருப்பார்கள். அத்துடன் பாடசாலை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பாடசாலை உபகரணங்களையும், கூட்டுறவுக் கடைகள் மூலம் உணவுப் பொருள்களையும் விநியோகிப்பதற்கும் அவர்களே பொறுப்பாக இருப்பார்கள்.

பாடசாலைகளில் மதிய உணவுக்காக மாணவர்களுக்கு முத்திரை வழங்குவது தொடர்பாகக் கல்வி, உயர் கல்வி அமைச்சுச் செயலாளர் திரு. எம். டி. டி. பீரிஸ் சகல மாகாண கல்வி அமைச்சு செயலாளர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றுநிருபத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் தெரிவித்துள்ள விடயங்கள் வருமாறு:

★ மாணவர்களுக்கு போசாக்கு உணவு வழங்கவும், மதிய உணவு விநியோகத்தில் இதுவரை நிலவி வந்த மோசடிகள், நிதி துஷ்பிரயோகம், கல்விப் போதனையில் குழப்ப நிலை, வீண் விரயம் ஆகியவற்றைத் தவிர்க்க 2 ஆம் தவணை முதல் மூன்று ரூபா பெறுமதியான முத்திரை தினமும் மாணவர்களுக்கு வழங்கப்படும்.

★ பிரதிக் கல்விப்பணிப்பாளர்களான அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர்கள் பொறுப்பில் முத்திரை விநியோகிக்கப்படும். மாணவர்களின் பதிவைப் பொறுத்து முத்திரை வழங்க வேண்டும்.

★ மாத இறுதியில் மாணவர் சமூகமளித்த நாள் அடிப்படையில் முத்திரை வழங்கப்படும்.

★ உள்ளூர் தானியங்களில் உணவு தயாரிக்கப்பட்டாலே முத்திரை வழங்க முடியும்.

★ கோதுமை மாவில் தயாரிக்கும் உணவுக்கு முத்திரை வழங்கப்படமாட்டாது.

★ ஆசிரியர்கள் மாணவர்கள் கோதுமை மாவில் தயாரிக்காத உணவு கொண்டுவந்தாலே முத்திரை பதிய வேண்டும்.

★ சமைத்த அல்லது வீட்டில் தயாரித்த உணவையே மாணவர்கள் கொண்டு வர வேண்டும். அப்படிக்கொண்டு வராதவர்கள் உணவுக்கு முத்திரை வழங்கப்படமாட்டாது.

★ முத்திரைகளுக்கு கூட்டுறவுக் கடைகளில் பொருள் கொள்வனவு செய்யலாம். பாடசாலை கூட்டுறவுக் கடைகளில் பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்யலாம்.

★ மாத இறுதி நாளில் இருந்து ஐந்து நாட்களுக்குள் மாணவர்களுக்கு முத்திரை வழங்கப்பட வேண்டும். முத்திரை பெற்ற மாணவன் நான்கு கிழமைக்குள் பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டும்.

★ மாதாந்த அறிக்கை மத்திய கல்வி அமைச்சு மதிய போசனப்பிரிவுக்கு மாவட்ட கல்விப்பணிப்பாளர் ஊடாக அனுப்பவேண்டும். (இ-3)

### மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவில்

## ஜனசக்திக் குடும்பங்களின் சுகாதார நிலைகுறித்து ஆய்வு

மன்னார், மே 17

மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஜனசக்தித் திட்டத்தின் கீழ் 3000 க்கு மேற்பட்ட குடும்பங்கள் உதவி பெறத் தெரிவாகியுள்ளன.

ஜனசக்திக் குழுத் தலைவர் இராசு, சுகாதார திணைக்கள உத்தியோகத்தரின் உதவியுடன் ஜனசக்தித் திட்டத்துக்கு தெரிவான குடும்பங்களின் வசதிகள் பற்றிய ஆய்வு நடத்தினார்.

மன்னார் பதில் சுகாதார வைத்திய அதிகாரி ஞ. பத்மேஸ்வரன் தலைமையில் மன்னார் மாவட்ட சுகாதாரப் பரிசோதகர் குடும்பநல சேவையாளர்கள் இந்த ஆய்வை கடந்த 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை நடத்தினர்.

இரணை இலுப்பக்குளம் காக்கை வன்னியன் குளம், சின்னவலயன் கட்டு, பெரிய வலயன்கட்டு, விளாத்திக்குளம், மரிசங்குளம், ஆகிய பகுதிகளில் ஆய்வுகள் நடத்தப்பட்டன.

ஆய்வின் முடிவில் போஷாக்கின்மை, தாய்மாரிடையே இரத்தச்சோகை, சர்ப்பவதிகள் பராமரிப்பின்மை, குழந்தைகளுக்கு தடுப்பு மருந்தேற்றாமை, மலகூட வசதிகள் இல்லாமை ஆகியன அவசிய நடவடிக்கைக்குரியவையாகக் காணப்பட்டன.

உடனடியாக குழந்தைகள் தாய்மார்களுக்கு திரிபோஷா வழங்கல், குழந்தைகளுக்கு கூடியவிரைவில்தடுப்பு மருந்து கொடுத்தல் ஆகியவை சம்பந்தமாக பதில் வைத்திய அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இப் பகுதிக்கு குடும்ப நல சேவையாளரை நியமித்தல் கர்ப்பிணிகள் சிகிச்சை நிலையம் அமைத்தல் பற்றி வவுனியா அகாதாரப் பணிப்பாளர் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. [இ-18)

### மானிப்பாய் பகுதி மக்களுக்கு

## ஆஸ்பத்திரி வீதி வங்கியில் சனியன்று நிவாரணம்

யாழ்ப்பாணம், மே. 17

இலங்கை வங்கி மானிப்பாய் கிளையினால் யாழ். ஆஸ்ப்பத்திரி வீதிக் கிளையில் அமைக்கப்பட்டுள்ள விசேட கரும பீடத்தில் நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளன.

எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை இங்கு வைத்து ஆயிரம் ரூபா நிவாரணப்பணமும், நாலாயிரம் ரூபா நிவாரணப் பணமும் வழங்கப்பட இருக்கிறது.

ஆயிரம் ரூபா நிவாரணம் பெறவுள்ள கிராம சேவையாளர் பிரிவுகளும், குடும்ப எண்ணிக்கையும் வருமாறு:-

★ சண்டிலிப்பாய் - 13
★ மானிப்பாய் - 44
★ சுதுமலை - 26
★ நவாலி - 24
★ ஆனைக்கோட்டை - 28
★ உயரபுலம் - 14
★ சங்கானை வடக்கு - 06
★ சில்லாலை - 14
★ மாசியப்பிட்டி - 04

நாலாயிரம் ரூபா நிவாரணம் பெறவுள்ள கிராம சேவையாளர் பிரிவுகளும் குடும்ப எண்ணிக்கையும் வருமாறு:-

★ பண்டத்தரிப்பு - 101
★ மாதகல் - 17
★ சண்டிலிப்பாய் - 16
★ மானிப்பாய் - 04
★ சுதுமலை - 12

(ஒ)

### தொலைபேசி சீர் குலைவால்

## மரண அறிவித்தல் வழங்கும் சேவையும் நிறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், மே. 17

தொலைபேசிச்சேவை சீரில்லாததால் வானொலிக்கு மரண அறிவித்தல் வழங்கும் சேவையை தபால் பகுதியினர் நிறுத்தியுள்ளனர்.

யாழ். தபால் நிலையங்களில் முன்பு பொருத்தப்பட்டிருந்த நேரடித் தொலைபேசி வசதி நிறுத்தப்பட்டதாலும், தற்சமயம் வழங்கப்பட்டுள்ள தொலைபேசியும் ஓயாமல் செயலிழப்பதாலும் இந்த சேவையை மேற்கொள்ள முடியாதுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. [இ-3]

## அமெரிக்க புத்தக கண்காட்சி

அமெரிக்க சென்ரர் அடுத்த மாதத்தில் யாழ்ப்பாணத்தில் புத்தகக் கண்காட்சி ஒன்றை நடாத்த ஏற்பாடுகள் செய்து வருகிறது.

இதற்கு முன்னோடியாக அமெரிக்க தூதரக பொது ஜன விவகாரங்களுக்கு பொறுப்பான அதிகாரி திரு. எம். றோஸ் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வருகிறார்.

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஏப்ரலில் வழங்கிய உதவிகள்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (ரி ஆர். ஆர். ஓ.) இவ்வாண்டு ஏப்ரல் மாதம் புனர்வாழ்வுத்திட்டத்துக்கென 6 லட்சத்து 94 ஆயிரத்து 328 ரூபாவை தனியாருக்கும் பொதுஸ்தாபனங்களுக்கும் வழங்கியுள்ளது.

இதில்இறந்தவர்கள்அல்லது காணாமல் போனவர்களில் தங்கியிருந்தவர்கள் அல்லது காயமடைந்தவர்களுக்கு 7 ஆயிரத்து 900 ரூபாவையும், விதவைகள் அல்லதுஅனாதைகளின் புனர்வாழ்வுக்கென வீட்டுக் கைத்தொழில்களை ஆரம்பிக்க மேலதிகநிவாரணமாக 1 லட்சத்து 7 ஆயிரத்து 448 ரூபா 45 சதத்தையும், செட்டிக்குளம் வாழ்வுதயத்துக்கு பாடசாலை ஒன்றை அமைப்பதற்கு மேலதிக உதவியாக 3 ஆயிரத்து 700 ரூபாவையும்,

காயமடைந்தவர்களுக்கு உதவுவதற்காகயாழ்மாவட்ட வைத்தியசாலைகளுக்கு 7 ஆயிரத்து 850 ரூபாவையும் கட்டைக்காடு, முள்ளியான் பலாலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களுக்கு வலைகளை விநியோகிப்பதற்காக 4 லட்சத்து 23 ஆயிரத்து 239 ரூபாவையும்,

பொலிகண்டி ஆலடியில் உள்ள மீன்பிடி துறைமுகங்களை ஆழமாக்க அகலமாக்க பொலிகண்டி மீனவர் கிராம முன்னேற்றச் சங்கத்துக்கு 65 ஆயிரம் ரூபாவையும்,

பாதிக்கப்பட்ட 3 தனி நபர்களுக்கு அவர்களின் சுய தொழில்களை மீள ஆரம்பிப்பதற்கு 10 ஆயிரம் ரூபாவையும்.

பொருளாதார உதவித் திட்டத்தின் அடிப்படையில் இறைச்சிக் கோழி வளர்ப்புக்கென குரும்பசிட்டி சன்மார்க்க சபைக்கு 58 ஆயிரத்து 750 ரூபாவையும்வழங்கியுள்ளது. (க-7)

## நாணய மாற்று விகிதம்

15-05-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 231.11 | 232.07 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.35 | 4002.80 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6706.18 | 6735.93 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2419.16 | 2437.28 |
| 100 | [illegible] | [illegible] | [illegible] |
| 100 | ஜப்பானிய யென் | 26.2648 | 26.4926 |

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# செய்திக்கொத்து

### விடுதி இன்னும் திருத்தப்படவில்லை

நெடுங்கேணி மே 17

கடந்தகால வன்செயல்களின் போது சேதமான நெடுங்கேணி ஆதார வைத்தியசாலையின் பெண் நோயாளர்களுக்கான விடுதி இன்னமும் திருத்தப்படவில்லை. ஆண்களுக்கான விடுதியும் மழையின் போது கூரை ஒழுகுவதால் பயன்படுவதில்லை.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இக்குறைபாடுகளை களைய உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர். (ப-108)

### கவிதைப்போட்டியில் முதலிடம்

யாழ்ப்பாணம், மே 17

தமிழ் சிங்கள புத்தாண்டை ஒட்டி இந்து சமய கலாசார அலுவல்கள் துணை அமைச்சினால் நடத்தப்பட்ட தமிழ் கவிதைப் போட்டியில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீசாலையைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியர் திரு. ப. வே. இராஜரத்தினம் முதலிடம் பெற்றார். (-7)

### நிர்வாக அலுவலர்

பச்சிலைப்பள்ளி மே 17

1988 நவம்பர் நடைபெற்ற எழுதுவினைஞர் சிறப்புத் தரப் போட்டிப் பரீட்சையில் திரு. சோ. கிருஷ்ணதாசன் என்ற ஒரேயொரு தமிழரே சித்தி பெற்று நிர்வாக சேவை அலுவலர் ஆகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

சுழிபுரம் பிரதேச சபை எழுதுவினைஞர் தரம் இரண்டு 'அ' பிரிவில் பணி புரிந்த இவர் சித்தி அடைந்த பின் பதவியுயர்வுடன் சாவகச்சேரி நகர சபைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

### கருணா நிலையத்தில்

கொக்குவில் மே 17

கிளிநொச்சி கருணா நிலையத்தில் அனாதைப் பிள்ளைகளைப் பராமரிப்பதற்குரிய விடுதியும் சிகிச்சை நிலையமும் கனடிய அரசின் உதவியுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இப் புதிய கட்டடத் தொகுதி விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. (69)

### கலை இலக்கிய வட்டம்

எழுத்தாளர்கள், கலைஞர்கள் நன்மை கருதி '' திருகோணமலை கலை இலக்கிய வட்டம் '' என்ற பெயரில் புதிய அமைப்பு ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

வளர்ந்த,வளர்ந்து கொண்டிருக்கும் கலைஞர்கள், எழுத்தாளர்கள் பற்றிய விபரங்களைத் திரட்டுதல், கலைஞர்களைக் கௌரவித்தல், திருகோணமலை சம்பந்தமான நூல்களைத் தேடி மீளப் பதித்தல், புதிய நூல்களை அச்சேற்றல் போன்றவை இந்த அமைப்பின் பிரதான நோக்கங்களாகும் (இ-155)

## கண்டதும் கேட்டதும்

அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் நோக்கிச் சென்ற வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றில் பூநகரியில் வைத்து வயோதிபர் ஒருவர் ஏற முயன்றபோது கால் தவறி கீழே விழுந்து விட்டார். அவருக்கு காயம் ஏற்பட்டது.

நடத்துநர் என்ன செய்திருப்பார் என்று நினைக்கிறீர்கள்?

அவர் மனிதாபிமானம் நிறைந்த நடத்துநர்.

அந்த வயோதிபருக்குத் தேவையான முதலுதவிச் சிகிச்சைகளைச் செய்தார் அத்துடன் நின்றுவிடாது தன் சொந்தப் பணத்தில் 100 ரூபா கொடுத்து யாழ். பெரியாஸ்பத்திரிக்கும் அனுப்பி வைத்தார்

நாம் எமது நாளாந்த பஸ் பயணத்தில் தினமும் எந்தெந்த வகையான நடத்துநர்களையும் சாரதிகளைக் காண்கிறோம் — சந்திக்கிறோம்.

அவர்களின் சிந்தனைக்கு இந்த வித்தியாசமான சம்பவம் சமர்ப்பணம்.

— செய்திலோலன்

## வாசகர் திருமுகம்

### வசாவிளான் வீதிகள் திருத்தப்படுமா?

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளின்போது, வசாவிளான் சந்திக்கு அண்மையான யாழ் - பலாலி வீதி, அச்சுவேலி - சங்கானை வீதிகள் மூடப்பட்டிருந்ததன் காரணமாக அவ் வழியாகச் சென்ற வாகனங்கள் யாவும் வசாவிளான் கிராமத்தின் சிறீ வேலுப்பிள்ளை வீதி, மவண்ட் காமல் வீதி, தம்பு வீதி, ஞானவைரவர் கோவில் வீதி, கோலகட்டி வீதி என்பனவற்றின் வழியாகத் திருப்பிவிடப்பட்டிருந்தது யாவரும் அறிந்ததே.

சாதாரண போக்குவரத்துச் சாதனங்களாகிய மினி பஸ். கார், மோட்டார் சைக்கிள் என்பவற்றைவிட கல், மண், சீமெந்து போன்ற பாரிய கட்டடப் பொருள்களை ஏற்றிச் செல்லும் லொறி, டிராக்டர் போன்ற கனரக வாகனங்களும் இவ் வீதிகளில் ஓடிய தன் விளைவாகவே இவை குன்றும், குழியுமாகக் காட்சியளிப்பதுடன், சாதாரண மிதிவண்டிகளில் கூட செல்ல முடியாத நிலையிலுள்ளன:

இன்னும் மழைகாலம்வந்து விட்டாலோ இதனால் செல்லும் பாதசாரிகள் படும் துயரம் சொல்லும்தரமன்று. இவ் வீதிகளில் காணப்படும் குழிகளில் மழைநீர் தேங்கி நிற்பதனால் அலுவலகங்களுக்கு செல்லும் உத்தியோகத்தர்களும், பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்களும் இவற்றில் வழுக்கிவிழுந்து உடைகளை அசிங்கமாக்கிக் கொண்ட சந்தர்ப்பங்களும் உண்டு.

இதுபற்றி இவ்வூரிலுள்ள பலரும், பல சங்கங்களும், ஸ்தாபனங்களும் வலி - வடக்கு பிரதேச அபிவிருத்திச் சபைக்கும் (மயிலிட்டி உப அலுவலகத்திற்கும்) பெரும்பாக உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் பலமுறை செய்துகொண்ட முறைப்பாடுகளும் அனுப்பிய மகஜர்களும் விழலுக்கிறைத்த நீர்போலாகிவிட்டன. இனியாவது, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் வீதிகளைத் திருத்த உரிய நடவடிக்கைகளைஎடுப்பார்களா?

எம். செபரட்ணம்,
தம்பு வீதி,
வசாவிளான்.

## தேவை

கிளிநொச்சியில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள உதயன் காரியாலயத்துக்கு பொறுப்பதிகாரி ஒருவர் தேவை.

பத்திரிகை விநியோகம், பணம் வசூலித்தல் ஆகியவற்றைப் பொறுப்புணர்ச்சியுடன் செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவராக அல்லது கிளிநொச்சியில் தங்கி இருந்து பணி ஆற்றக் கூடியவராகவும் அவர் இருக்க வேண்டும்.

தெரிவு செய்யப்படுபவர் பிணைப்பணம் செலுத்துமாறு கோரப்படுவார்.

தகமைகள் மற்றும் நற்சான்றிதழ்களுடன் 23-05-90 முன்பாக கீழ்வரும் விலாசத்திற்கு விண்ணப்பத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

ஆளணி முகாமையாளர்,
நியூ உதயன் பப்பிளிக்கேஷன்
பிறைவேற் லிமிடெட்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் பண்டிதர் வித்துவான்
சு. இ. பொன்னையா
(இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)

தோற்றம்: 09 - 10 - 1912
மறைவு: 17 - 04 - 1990

பழம் தமிழ் வித்தகரானீர்
பாரினில் அதன் புகழ் பரப்பினீர்
உற்றவர்க்கு உறுதுணை யானீர்
பெற்றவர் மனம் நோகா நடந்தீர்
அனைவரும் அலமந்து நிற்கிறார்
அவன் தாள் அணைத்து விட்டீர்
பொறுக்குமோ ஐயா எமது நெஞ்சம்
பேதலித்து நிற்கிறோம் துணையின்றி

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சரவணை மேற்கு.
வேலணை.
(13093)

காஷ்மீர் தகராறு தொடர்பாக

# இந்தியா - பாக். யுத்தம் ஏற்படாமல் தவிர்க்க அமெ. அரசு தீவிர முயற்சி

## புஷ் நியமித்த உயர் மட்டக் குழு முதலில் இஸ்லாமபாத் பயணம்

வாஷிங்டன், மே 16

காஷ்மீர் தகராறுக்குத் தீர்வு காணும் நடவடிக்கையில் அமெரிக்கா முழு மூச்சாக இறங்கியுள்ளது;

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் இது தொடர்பாக இந்தியா, பாகிஸ்தான் அரசுகளுடன் நேரடிப் பேச்சுக்களை நடத்த உயர்மட்டக்குழு ஒன்றை நியமித்திருக்கிறார்.

யுத்தம் ஒன்றை நோக்கி இந்தியாவும் பாகிஸ்தானும் சென்று கொண்டிருக்கின்றன. இதனைத் தடுப்பதே அமெரிக்காவின் நோக்கம் என்று வெள்ளைமாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்க அரசின் உயர் மட்டக்குழு, முதலில் பாகிஸ்தான் சென்று பேச்சு நடத்த உள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை இப்பேச்சுக்கள் இஸ்லாமபாத்தில் நடைபெறும் என்று வெள்ளைமாளிகை அறிவித்தது. அதன் பின்னர் இந்தியாவுக்கு இக்குழு விஜயம் செய்யும்.

பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் எட்டு இஸ்லாமிய நாடுகளுக்கு 9 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு உள்ளார்.

நேற்று அவர் ஈரான் தலைவர்களுடன் தெஹ்ரானில் பேச்சுக்கள் நடத்தினார்.

காஷ்மீர் விஷயத்தில் பாகிஸ்தான் நிலைப்பாட்டுக்கு ஆதரவு திரட்டுவதே பெனாஸிரின் சுற்றுப் பயண நோக்கமாகும்.

அமெரிக்காவின் இந்த முயற்சியை மத்தியஸ்தம் என்று கருத வேண்டியதில்லை என்று வெள்ளை மாளிகை அறிவித்தது. (எ)

## சோவியத்தில் புதிய கட்சி; சதுரங்க வீரர் ஆரம்பிக்கிறார்!

மாஸ்கோ, மே 16

சோவியத் யூனியனைச் சேர்ந்த உலக சதுரங்க சாம்பியன் காரி காஸ்பரோவ் புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்கிறார்.

இம்மாதம் 27 ஆம் திகதி மாஸ்கோவில் இப்புதிய கட்சியின் ஆரம்ப விழாவை நடத்தத் திட்டமிடப்பட்டு உள்ளது.

பிரிட்டனின் ஒப்சேவர் வார இதழுக்கு அளித்த பேட்டியில் திரு. காஸ்பரோவ் சொன்னதாவது; நான் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து ராஜினாமாச் செய்துவிட்டேன்.

இப்போது சகல அரசியல் அமைப்புகளையும் ஒன்று சேர்த்து கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிரான ஒரு புதிய அரசியல் கட்சியை ஆரம்பிக்க உள்ளேன்.

அரசியல் சீர்திருத்தத்தை கொண்டு வரக்கூடிய திறமை திரு. கோர்பச்சேவிடம் இல்லை. இதனால் நான் கோர்பச்சேவில் நம்பிக்கை இழந்துவிட்டேன் கோர்பச்சேவ் ஒரு நாளும் ஜனநாயக சக்திகளுடன் சேரமாட்டார் —

இப்படிக் கூறிய திரு. காஸ்பரோவ், தனது 22 ஆவது வயதிலே உலகின் சதுர சாம்பியனாக வெற்றியீட்டினார்.

## பர்மாவில் கலவரம்

ரங்கூன், மே 16

பர்மாவில் வன்செயல்கள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பர்மாவின் முதலாவது சுதந்திரப் பொதுத் தேர்தல் இம்மாதம் 27 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (எ)

## 'மீண்டும் ஆட்சிஅமைப்பேன்'; மார்கரட் தாட்சர் சூளுரை!

அபர்டீன். மே 16

மோசமான அரசியல் பொருளாதார நெருக்கடிக் கடிக்குள் அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் பிரதமர் மார்கரட் தாட்சருக்கு நான்காவது முறையாகவும் பிரதமராகும் வாய்ப்பை எற்படுத்தியுள்ளன.

ஸ்கொத்லாந்து தலைநகர் அபர்டீனில் நடந்த கன்சர்வேட்டிவ் கட்சிக் கூட்டத்தில் பிரதமர் பேசுகையில்:

அடுத்த பொதுத் தேர்தல் 1992 நடுப்பகுதியில் நடத்தப்படும். அதில் எனது தலைமையில் கன்சர்வேட்டிவ் கட்சி மீண்டும்வெற்றியீட்டும்என்று தெரிவித்தார்.

"எனது தீவிரக் கொள்கைகள் காரணமாகவே 1979 முதல் கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சியில் இருந்து வருகிறது." என்றும் திருமதி தாட்சர் சொன்னார். (எ)

## ஹிட்லரின் ஆதரவாளருக்கு புதுமையான தண்டனை!

வைற்பிளெய்ன்ஸ் மே 16

உயர் பாடசாலைச் சுவர் ஒன்றில் ஹிட்லர் மீண்டும் வந்துவிட்டார்! என்று எழுதிய மூன்று இளைஞருக்கு அமெரிக்க நீதிபதி ஒருவர் புதுவிதமான தண்டனை வழங்கினார்.

"உங்களைத் தண்டிக்க நான் விரும்பவில்லை. உங்களுக்கு அறிவூட்ட விரும்புகிறேன்"- என்று கூறிய வெஸ்ற்செஸ்டர் நீதிபதி ஜோன்கரே "ஹிட்லரால் ஏற்பட்ட உலக அழிவு பற்றி படித்து விட்டு வாருங்கள் பொது அறிவுப் போட்டி ஒன்றை நான் நடத்த உள்ளேன்" — என்று மூன்று இளைஞர்களுக்கும் உத்தரவிட்டார்.

இந்த வழக்கு ஐரோப்பாவில் 2 ஆவது உலக மகா யுத்தம் முடிந்ததை நினைவுபடுத்தும் 45 ஆண்டு நிறைவு தினமான (8.5 1990) செவ்வாய் அன்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

பாடசாலைச் சுவரில் நாஸி சின்னமான ஸ்வஸ்திகாவையும் ஹிட்லர் மீண்டும் வந்துவிட்டார் என்ற வாக்கியத்தையும் கடந்த ஆண்டு ஜூனில் எழுதியதாக இந்த மூன்று இளைஞர் மீதும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

## இராணுவதளபதி சர்மா கருத்து

ராணிகேற், மே 16

நாட்டின் எல்லைப்புற நிலைமை திருப்திகரமானதாக இல்லை.

இந்தியஇராணுவத் தளபதி ஜெனரல் வி. என் சர்மா முன்கண்டவாறுசொன்னார்.

இந்திய இராணுவம் எந்த நிலையையும் சமாளிக்கக் கூடிய நிலையில் இருப்பதாகவும் அவர் சொன்னார்.

எல்லாப்பக்கத்திலும்இருந்து நாட்டிற்குச் சவால்கள் வந்துள்ளன அனைத்தையும் எமது வீராகள் சமாளிப்பர் என்றும் ஜெனரல் சர்மா சொன்னார்.

எதிர்வரும் ஜூலை 31 இல் ஜெனரல் சர்மா தளபதிப் பதவியில் இருந்துஓய்வு பெறுகிறார்.

ஜெனரல் ரொட்ரிக்கன் புதிய தளபதியாக பதவி ஏற்கிறார். (எ)

## ஜேம்ஸ்பேக்கர் மாஸ்கோவிஜயம்

மாஸ்கோ, மே 16

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் நேற்று மாஸ்கோ சென்றார்.

இம்மாதம் 30 ஆம் திகதி சோவியத் அதிபர் கோர்ப்பச்சேவ் — அமெரிக்க அதிபர் புஷ் உச்சி மாநாடு நடைபெறவிருப்பது தெரிந்ததே.

அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை மேற்கொள்வதே ஜேம்ஸ் பேக்கரின் மாஸ்கோ விஜயம் என்று சொல்லப்பட்டது. (எ

## சண்டைவிமானம் தயாரிக்கும் அமெ.-சீனா உடன்பாடுரத்து;

வாஷிங்டன் மே 16

சண்டை விமானங்களை கூட்டாக தயாரிக்க அமெரிக்காவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை சீனா திடீரென்று ரத்துச் செய்து விட்டது.

இதற்குக் காரணம் தெரிவிக்கப்படவில்லை

சீனாவின் இந்த நடவடிக்கை அமெரிக்காவுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கிறது.

கடந்த ஆண்டு மாணவரின் ஜனநாயகக் கிளர்ச்சியை இராணுவத்தைக் கொண்டு அடக்கியதற்கு ஆட்சேபம் தெரிவித்து அமெரிக்கா, சீனாவுக்கு இராணுவத் தளபாட விற்பனையை நிறுத்திவிட்டது.

இதற்காக சீனா இந்தபதில் நடவடிக்கையை எடுத்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. (ஒ)

பலரின் வேண்டுகோளுக்கிணங்க
இலங்கை நிருவாக சேவை
(SLAS)
போட்டிப் பரீட்சைக்கான
விசேட பயிற்சி வகுப்புகள்
2 ஆவது பிரிவு
ஆரம்பம் 19-05-1990
(பிற் பகல் 2 — 5)

★ இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் 18 – 05 – 90 ன் முன் விண்ணப்பிக்கலாம்.
★ விண்ணப்பப் படிவங்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.


பட்டதாரிகளுக்கும் / அரச உத்தியோகத்தர்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

★ இலவச பாடக்குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 300/-
★ விரிவுரைகள் சனி, ஞாயிறு, விடுமுறை தினங்களில்

ASTAN Institute
166/1, Hospital Road, Jaffna.
(A S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)
[சி-5024]

மகனுக்காக தன்னுயிரைத் தியாகஞ்செய்த தந்தையின்

## ஓராண்டு நினைவு நாள்



அமரர்
கதிரவேலு திருவிளங்கம் (S.B.O)
அவர்கள்
(இலங்கை மின்சாரசபை, கிளிநொச்சி. உபமின்நிலையம்)

ஆண்டவன் படைப்பு: 18 - 07 - 1936
அநியாய அழிப்பு: 28 - 05 - 1989
ஆண்டு திதி: 17 - 05 - 1990

அன்பான தெய்வமே ஆருயிர் அப்பாவே
ஓராண்டு சென்றதப்பா எமதில்லம் இருண்டதப்பா
உங்களை நினைத்த போதினிலே
எமதுள்ளம் துடிக்குதப்பா
எத்தனை கற்பனைகள் உள்ளத்தில் உதித்தனவோ!
அத்தனையும் நிஜமாகும் வேளையிலே
உங்களை இழந்து தவிக்கின்றோம்
சிறிய வயதில் எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி
உங்களை மீளாத்துயில் கொள்ளச் செய்தனரே
உங்கள் ஆத்மா சாந்தி அடைய தினமும் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

"திரு சந்திர இல்லம்"
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.
[சி-5039]



பஜாஜ் வாங்கி வெகுமதி பெறுங்கள்



பஜாஜ் வாகனம் ஒன்றை வாங்கும் உங்கள் ஆசைக் கனவை நனவாக்க இதுவே உன்னதமான சந்தர்ப்பம். ஏனெனில், தனித்துவமான பஜாஜ் வெகுமதிப் போட்டியில் கலந்துகொண்டு அற்புதமான பரிசுகளை வெல்லும் அரிய வாய்ப்பினை நீங்கள் பெறுவீர்கள்.

வெகுமதிப் போட்டி நாடளாவிய ரீதியில் கையிருப்பு முடியும் வரை நடத்தப்படும். ஆகவே, உங்கள் பஜாஜ் வாகனத்தை விரைந்து வாங்கிப் போட்டியில் பங்குபற்றுங்கள். பரிசுப் பட்டியலைப் பாருங்கள். எம்மிடமுள்ள புத்தம் புதிய பஜாஜ் வாகன வகைகளைப் பார்க்க வாருங்கள்.



போட்டி விதிகள்
1. றிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி லிமிட்டெட் அதன் உப நிறுவனங்கள் அதன் விளம்பர முகவர்களான தொம்ஸன் லங்கா லிமிட்டெட் ஆகியவற்றின் ஊழியர்களும் அவர்களின் குடும்பத்தினரும் தவிர்ந்த சகல இலங்கைப் பிரஜைகளும் இப் போட்டியில் பங்குபற்றலாம்.
2. கையிருப்பு முடியும் வரை மட்டுமே இப் போட்டி நடத்தப்படும்.
3. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. 4. கடிதத் தொடர்புகளுக்கு இடமில்லை.



1ம் பரிசு - பஜாஜ் சுப்பர் டிலுக்ஸ் ட்ரைஷோ
2ம் பரிசு - க்வசாக்கி பஜாஜ் கே.பி.K.B 100
ஒவ்வொன்றும் ரூ. 2,500/- பெறுமதியான உதிரிப் பாகங்களைக் கொண்ட 10 ஆறுதல் பரிசுகள்

றிச்சர்ட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமிட்
69, அமிட் பார்க் கோனர், கொழும்பு-2. தொலைபேசி : 549480, 422149.

கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## றுகுணு சீமெந்து ஆலை மீண்டும் இயங்கும்

றுகுணு சீமெந்து தொழிற்சாலை மூடப்படமாட்டாது கிளிங்கர் பற்றாக்குறை காரணமாக மூடப்பட்டுள்ள இத்தொழிற்சாலை இந்த வாரம் முதல் மீண்டும் இயங்கும் என்றுஇலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத் தலைவர் சொன்னார்.

காங்கேசன்துறை, புத்தளம் ஆகிய இடங்களில் உள்ள சீமெந்து தொழிற்சாலைகளினால் போதுமான கிளிங்கரை வழங்க முடியாமற் போய் விட்டது.

இப்போது கிளிங்கர் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது என்றும் கூட்டுத்தாபன தலைவர் சொன்னார். (உ-எ)

டாக்காவிலிருந்து திருப்பியனுப்பப்பட்ட

## மூன்று இலங்கையர்கள் கல்கத்தாவில் கைதாகினர்

கொழும்பு மே 17

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட மூன்று இலங்கையர்கள் கல்கத்தா விமான நிலையத்தில் வைத்து இந்திய குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

மோசடி செய்யப்பட்டதாகக் கூறப்படும் இந்திய பாஸ்போர்ட்டுகள் மற்றும் பயண தஸ்தாவேஜுகளை இவர்கள் வைத்திருந்தார்களாம்.

மூன்று இலங்கையரும் மாணவர்கள் என்றும்-

பம்பாயில் இருந்து டாக்கா பாங்கொக் ஊடாக லண்டன் செல்ல இவர்கள் முயற்சித்தனர் என்றும் கூறப்படுகிறது. (உ-எ)

## குச்சவெளி ஆஸ்பத்திரியை திருத்த சுவிஸ் உதவி

கொழும்பு மே 17

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குச்சவெளி கிராமிய ஆஸ்பத்திரியின் புணர்நிர்மாண வேலைகளை சுவிஸ் அரசு, சுவிஸ் அழிவு நிவாரண பிரிவு ஊடாக மேற்கொள்ள உள்ளது.

மன்னார் ஆதார ஆஸ்பத்திரியின் புணர்நிர்மாண வேலைகளை சுவிஸ் அரசு நிறைவேற்றியது தெரிந்ததே. (உ-எ)

## நீதிக்காகப் போராடுவதற்கு மீள வருவாராம் சந்திரிகா!

கொழும்பு மே 17

"நீதிக்கான போராட்டத்தை தொடர்ந்து நடத்த நான் திரும்பி வருவேன்" பிரிட்டன் செல்லுவதற்கு முன்னர் தனது ஆதரவாளருக்கு விடுத்த செய்தியில் திருமதி சந்திரிகா குமாரணதுங்க முன்கண்டவாறு சொன்னார்.

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் !வி! பிரிவுத் தலைவராக திருமதி சந்திரிகா இருக்கிறார். (உ-எ)

## 52 வகைமருந்துகள் மட்டுமே அத்தியாவசியமானவை!

கொழும்பு மே 17

நாட்டில் உபயோகத்தில் உள்ள மருந்து வகைகளில் 52 வகை மருந்துகளே அத்தியாவசியமானவை என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு நியமித்த குழு ஒன்றின் ஆய்வில் இது தெரியவந்தது.

இத்தகவலை சுகாதார அமைச்சர் ரேணுகா ஹேரத் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தேசிய அபாயகரமான மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபை சட்டத்திருத்தம் மீதான விவாதத்தின் போது இது தெரிவிக்கப்பட்டது.

## ஓடும் பஸ்ஸிலிருந்து சிசுவை வெளியே எறிந்த தந்தை

கொழும்பு, மே 17

ஓடும் பஸ்ஸில் இருந்து தனது ஒன்றரை வயது ஆண் குழந்தையைத் தூக்கி வெளியில் எறிந்தாராம் தந்தை.

தலையில் பலத்த காயங்களுடன் ஆபத்தான நிலையில் குழந்தைகொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

சிவனொளிபாதத்துக்கு யாத்திரை போய்விட்டு தனியார் பஸ் ஒன்றில் திரும்பி வருகையில் வறக்காபொளை பட்டினத்தில் இக் குழந்தையை தந்தை எறிந்தாராம்.

தந்தையைப் பொலீஸார் கைதுசெய்தனர். (உ-எ)

### இராஜினாமா ஏற்பு

கொழும்பு, மே 17

யாழ். எம்.பிதிரு சி சிவமகாராசா தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமச்செய்துவிட்டார் என்று சபாநாயகர் அல்ஹாஜ் முகம்மது நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அறிவித்தார். (உ-எ)

### சுழியில் சிக்கி மரணம்

கொழும்பு, மே 17

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் பணிபுரிந்து வந்த ஊழியர் கிருஷ்ணாய்லால் என்பவர் கடந்த ஞாயிறு கடலில் நீராடும் போது சுழியில் அகப்பட்டு மரணமானார் (உ-எ)

## அரசு - ஈ.பி.ஆர்.எல்.எவ். பேச்சில் 6ஆவதுதிருத்தம்ஆராயப்படவில்லை

கொழும்பு, மே 17

இலங்கை அரசு ஈ.பி.ஆர். எல். எவ். பேச்சுக்களின் போது பிரச்சினைக்குரிய வடக்கு- கிழக்கு மாகாண சபை கலைப்பு, ஆறாவது சட்டத்திருத்தம் ஆகியன இடம் பெறவில்லை,

கொழும்பில் இருந்து வெளிவரும் அரசு சார்பு பத்திரிகை டெய்லி நியூஸ் இத்த கவலை வெளியிட்டு உள்ளது,

பேச்சின்ஒருகட்டத்தில், தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கத்துடன் எந்த நேரமும் எந்த இடத்திலும் பேச்சுக்கள் நடத்தத் தயாராக இருப்பதாக ஈ. பி. ஆர். எல். எவ் குழு தெரிவித்ததாக த ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டது·

வடக்கு-கிழக்கு மாகாணம் எதிர்நோக்கும் பிரச்சினைகள், நிரந்தர அமைதி ஏற்படுதல் ஆகியன குறித்து இப்பேச்சுக்களை நடத்தலாம் என்றும், இதற்கான பொதுப் பேச்சு ஒன்றில் கலந்து கொள்ளும் படி விடுதலைப்புலிகள் இயக்கத்தை அரசு தூண்டவேண்டும் என்றும் ஈ. பி. ஆர். எல். எவ். குழு மேலும் தெரிவித்ததாக 'ஐலண்ட்' செய்தி கூறியது. (உ-எ)

## 400 உள்ளூராட்சி சபைகளின் மின் விநியோகப் பொறுப்பை மின்சார சபை கையேற்கும்

கொழும்பு மே 17

சரியான முறையில் மின் விநியோகத்தைக் கையாளத் தவறியதாகக் கருதப்படும் 400 உள்ளூராட்சி சபைகளின் மின் விநியோகக்கடமைகளை இலங்கை மின்சார சபை பொறுப்பு ஏற்கவிருக்கிறது.

மின் விநியோக நிலுவைகளைச் செலுத்தத்தவறிய உள்ளூராட்சி சபைகளிடமிருந்தும் மின் விநியோகப் பணிகளை அடுத்த சில ஆண்டுகளில் இலங்கை மின்சார சபை ஏற்கும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது, (உ-எ)

### இரண்டாம் தவணை நீடிப்பு

கொழும்பு, மே 17

ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை திகதிகள் மாற்றமடைந்துள்ளதால் பாடசாலைகளின் இரண்டாம் தவணை ஆகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி வரை நீடிக்கப்படும் என கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பாடசாலைகள் இரண்டாம் தவணை விடுமுறைக்கென ஜூலை மாதம் 20 ஆம் திகதி மூடப்பட இருந்தன. புதிய ஒழுங்கின்படி ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதிக்குப் பதிலாக செப்டம்பர் 5 ஆம் திகதி பாடசாலைகளின் 3ஆம் தவணை ஆரம்பமாகும். (ப)

### வேலை நீக்கம்

கொழும்பு, மே 17

பெரிய வெங்காயத்தை பெரும் தொகையாக தனியார் துறைக்கு விற்று வந்ததாகக் கூறப்படும் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலைய அதிகாரி ஒருவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

கூ. மொ. வி. தலைவர் ஆரிய சமரவீர இத்தகவலை தெரிவித்தார். (உ-எ)

### மின்னல் தாக்கி மரணம்

கொழும்பு, மே 17

அண்மையில் நாவலப்பிட்டியில் உள்ள அஹஸ்வேவ என்னும் கிராமத்தில் மின்னல் தாக்கி நான்கு குழந்தைகளின் தாய் ஆர். எம். பொடிஹாமினே மாண்டார். அவரது விட்டில் இருந்த 19 ஆடுகளும் மாண்டன. (உ-எ)

### எதிர்க்கட்சி தலைவராக அநுரா

கொழும்பு மே 17

பதில் எதிர்க்கட்சித் தலைவராக திரு. அனுரா பண்டாரநாயக்கா நியமிக்கப்பட்டார்.

வைத்திய சிகிச்சைக்காக யூகோஸ்லேவியா சென்றுள்ள திருமதி சிறிமாவோபண்டாரநாயக்கா திரும்பும்வரை திரு. அனுரா பண்டாரநாயக்கா பதில் எதிர்கட்சித்தலைவராக பணிபுரிவார்.

திருமதி பண்டாரநாயக்காவே இந்த ஏற்பாடடைச் செய்திருப்பதாக சபாநாயகர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அறிவித்தார். (உ-எ)

### கொழும்பில் கனத்த மழை

கொழும்பு, மே 17

கொழும்பு நகர்ப்பகுதியில் நேற்று மாலை கனத்த மழை பெய்தது. (உ)

### வான் பிடிபட்டது

கொழும்பு மே 17

ஜே. வி. பி. தலைவர்களில் ஒருவரான உபதிஸ்ஸ கமநாயகா பாவித்ததாகக் கூறப்படும் வான் ஒன்றைப் பொலீஸார் கைப்பற்றினர்.

வானில் இருந்து ஐந்து நபர்களும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

வழமையான சோதனையின் போது பண்டாரவளையில் கடந்த ஞாயிறு இந்த வாகனம் பிடிபட்டது.

உபதிஸ்ஸ கமநாயகா அரசுப்படையினருடன் நடந்த மோதல் ஒன்றில் கொல்லப்பட்டார் என்பது தெரிந்ததே. (உ-எ)

பொருள்களுக்கு

## நியாய விலைகளை நிர்ணயிக்க விடுதலைப் புலிகள் ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 17

யாழ். நகரத்தில்உள்ள வியாபார நிலையங்கள் அனைத்தும் இன்று நண்பகலுக்கு முன்னர் தமது விலைப்பட்டியல்களை வர்த்தக சங்கத்திடம் சமர்ப்பிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பொருள்களுக்கு நியாய விலைகளை நிர்ணயிக்கும் பொருட்டே விலைப்பட்டியல்கள்(கொள்வனவு+விற்பனவு) கோரப்பட்டுள்ளன.

வியாபாரிகள் தாம் விற்கும் பொருள்களை கொழும்பில் கொள்வனவு செய்த விலை, அவற்றை இங்கு விற்கும் விலை என்பன அடங்கிய விலைப்பட்டியலைச் சமர்ப்பிக்குமாறே வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் வேண்டுகோளை அடுத்து யாழ்.வர்த்தகர் சங்கம் இந்த விலைப்பட்டியல்களைக் கோரியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை யாழ் மாவட்ட வர்த்தக சங்க பிரதிநிதிகளைச் சந்தித்த விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. மகேந்திரராசா (மாத்தயா), "விடுதலைப் புலிகளினால் ஆடம்பர பொருள்களுக்கு விதிக்கப்படும் வரியை சாட்டாக வைத்து, பலர் ஆடம்பரப் பொருள்களையும், அத்துடன் அத்தியாவசிய பொருள்களையும் மிக அதிகரித்த விலையில் விற்கின்றனர். அதன் காரணமாக வியாபாரிகளிடமிருந்து விலைப்பட்டியல்களைப் பெறுமாறு கேட்டுக்கொண்டார்.

அதன் பிரகாரம் விலைப் பட்டியல்கள் இன்று சேகரிக்கப்பட்டு விடுதலைப் புலிகளுக்குச் சமர்ப்பிக்கப்படும். அவற்றைப் பரிசீலனை செய்த பின்னர், யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு பொருளும் என்ன விலைக்கு விற்கப்பட வேண்டும் என்பது நிர்ணயிக்சப்படும். (அ-9)

### ஈழத் தமிழ்- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டும் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன் — என்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கக் குழு ஒன்று முதலமைச்சர் கருணாநிதியைச் சந்திக்க சென்னை வரவிருப்பதாக வெளிவந்த செய்திபற்றி திரு. கருணாநிதி தெரிவிக்கையில் —

"அவர்கள் உரிய முறையில் அனுமதி பெற்று வரவேண்டும். வருவதாக இருந்தால் முன்கூட்டியே மத்திய அரசாங்கத்தைக் கலந்து பின்னர் அவர்களைச் சந்திப்பதாக அவர்களுக்கு நான் சொல்லி உள்ளேன" — என்று கூறினார்.

இராமேஸ்வரம் சம்பவம் நிகழ்ச்சிகளையும் நேற்று போராளிகளின் ஜீப் ஒன்று கவிழ்ந்த நிகழ்ச்சி ஒன்றையும் சுட்டிக் காட்டிய திரு. கருணாநிதி, "போராளிகள் வன்முறையில் ஈடுபட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதை நான் அவர்களுக்கு இறுதி எச்சரிக்கையாகத் தெரிவித்துக்கொள்கிறேன்" —என்றும் குறிப்பிட்டார்.

அகதிகள் கைதாகவில்லை

அகதிகளாக வந்த எவரும் கைது செய்யப்படவில்லை. அவர்களில் போராளிகளாக இருந்த சுமார் 200 பேர் மாத்திரமே கைது செய்யப்பட்டனர் என்றும் திரு கருணாநிதி சொன்னார்.

மத்திய அரசிடம் கடலோரக் காவல்படை, கடற்படைப் பிரிவுகள் ஆகியவற்றை விரைவில் அனுப்பி வைக்கும்படி மீண்டும் கோரப்பட்டுள்ளது என்று சொன்ன திரு கருணாநிதியிடம் உளவுப் பிரிவான 'றோ'வின் நடவடிக்கைபற்றி செய்தியாளர்கள் கேட்டனர்.

"இது குறித்து வெளிப்படையாக விவாதம் வேண்டாம் என்று பிரதமர் வி. பி. சிங் கூறியிருக்கிறார். இது பற்றி நான் அவரிடமே பேசவுள்ளேன்" — என்று திரு. கருணாநிதி பதிலளித்தார். (ஒ-ஏ)

## கொழும்பு விடுதியில் கைதான தமிழ் இளைஞர்களுக்கு பிணை!

கொழும்பு மே 17

கொட்டாஞ்சேனையிலுள்ள விடுதி ஒன்றில் இருந்து கைது செய்யப்பட்ட பத்து வட பகுதி இளைஞர்களை தலா 3 ஆயிரம் ரூபா பிணையில் கொழும்பு மேலதிக நீதிவான் ரியூடர் அபேரத்னா விடுதலை செய்தார்.

இந்த இளைஞர்கள் கொழும்பில் வேலை செய்பவர்கள் அல்லர். சந்தேகத்தின் மீது இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மீதான விசாரணை முடியவில்லை. எனவே இவர்களைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கவேண்டும் என்று பொலீஸார் விண்ணப்பித்தனர்.

இளைஞர்கள் குற்றஞ் செய்யவில்லை வேண்டும் என்றே துன்புறுத்தப்படுகின்றனர். என்று கூறிய சட்டத்தரணிகள், பிணையில் அனைவரையும் விடுதலை செய்யும்படி விண்ணப்பித்திருந்தனர். (உ-எ)

### நினைவில் இன்று

17- 05- 1990

- நோர்வே தேசிய தினம்
- இந்தியாவுக்கு நேரடிக் கடல் வழியைக் கண்டு பிடித்த முதல் ஐரோப்பியர்வாஸ்கொடகாமா 17- 5- 1498 இல் இந்தியாவை வந்தடைந்தார்.

## காங்கேசன் வாடிவீட்டை மீண்டும் இயக்க முயற்சி!

யாழ்ப்பாணம், மே 17

காங்கேசன்துறை வாடி வீட்டை மீண்டும் இயக்க செயலக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அரசாங்க செயலகத்தால் இந்தவாடிவீடு முன்னர் இயக்கப்பட்டு வந்தது. பின்னர் வாடிவீடு கட்டடத்தில் இந்தியப்படை முகாமிட்டதை அடுத்துஅது செயல்இழந்தது

தற்போது அந்த வாடி வீட்டைப் புனரமைத்து நடாத்துவதற்கான மதிப்பீடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (2 3)

## 50 யூனிட்டுக்கு குறைவானால் மின்கட்டணம் மாற்றமில்லை

யாழ்ப்பாணம், மே 17

மின்கட்டணம் கடந்த ஏப்ரல் மாதம் முதல் உயர்த்தப் பட்டுள்ளது. ஆனால் 50 யூனிட்டுக்களுக்கு குறைவாக பாவிக்கும் வீட்டுப் பாவனையாளர்களுக்கான மின் கட்டணம் உயர்த்தப்படவில்லை என்று யாழ் மாநகரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

வீட்டுப்பாவனையாளர்கள் 50 யூனிட்டுக்குள் மின்சாரத்தை சிக்கனமாக பாவிப்பதன் மூலம்கட்டண உயர்வு பாதிப்பதைத் தவிர்க்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (உ-எ)

## கொடிகாமத்தில் நவீன பஸ் நிலையம்

### விரைவில் அமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 17

கொடிகாமத்தில் நவீன பஸ் நிலையம் ஒன்று விரைவில் அமைக்கப்பட இருக்கிறது.

யாழ்- அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் அப்பகுதிக்கு விஜயம் செய்த சமயம் பொது அமைப்பு பிரதிநிதிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து இந்த நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரச அதிபர் பஸ் நிலையம் அமைய இருக்கும் இடத்தைப் பார்வையிட்டதுடன் வட பிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு விரைவில் இந்த நிலையத்தை அமைத்துத் தர நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வுவேலைகளையும் அவர் பார்வையிட்டார்.

பாடசாலைக் கட்டடங்கள் வீதிகள் ஆகியவற்றையும் அவர் பார்வையிட்டார்.

பல அமைப்புகள் குறைபாடுகள் சம்பந்தமாக மகஜர்கள் கையளித்தனர். (இ-3)

### ராதா நினைவாக நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், மே 17

வீர வேங்கை லெப். கேர்ணல் ராதாவின் 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலியை முன்னிட்டும், முள்ளிக் குளத்தில் வீரமரணம் எய்திய 11 வேங்கைகளின் முதலாம் வருட நினைவாகவும் விளையாட்டுப் போட்டிகளும், கலை கலாச்சார போட்டிகளும் நடத்தப்பட உள்ளன.

மன்னார் - முள்ளிக் குளத்திலேயே இந்த நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

எதிர்வரும் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் காலை 7 மணி முதல் முள்ளிக் குளம் லெப்டினன்ட் கேர்ணல் ராதா விளையாட்டரங்கில் பிரஸ்தாப விழா நடைபெற உள்ளது.

நிகழ்ச்சிக்கு திரு. அமிர்தம் குருஸ் தலைமை தாங்குவார். மன்னார் அரசாங்க அதிபர் ஏ. சி. நேசநயகம் பிரதம அதிதியாகவும், விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்டத் தளபதி சுபன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் சுரேஷ், முள்ளிக்குளம் முகாம் பொறுப்பாளர் கெக்குவர், முள்ளியவளை-சிலாவத்துறை பிரதேசப் பொறுப்பாளர் ரமேஷ் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வர். (உ-9)

## 400 கோடி ரூபாவுக்கு ஏலம் போன வான்கொக்கின் ஓவியம்

வாஷிங்டன் மே 16

உலகப் புகழ்பெற்ற டச்சு ஓவியர் வான் கொக்கின் ஓவியம் ஒன்று எட்டுக் கோடி 25 லட்சம டாலருக்கு ஏலம் போனது.

இலங்கைப் பணத்தில் இத்தொகை 400 கோடி ரூபாவாகும்.

ஜப்பானைச்சேர்ந்த ஒருவர் இந்தஓவியத்தை வாங்கினார் என்று பி பி சி.தெரிவித்தது.

இத்தொகைக்கு ஓர் ஓவியம் ஏலத்தில் விலைபோனது இதுவே முதல் தடவை என்று சொல்லப்படுகிறது.

வான்கொக்கின் ஓவியம் ஒன்று கடந்த ஆண்டில் 5 கோடி 30 லட்சம் டாலருக்கு ஏலம் போயிருந்தது இலங்கைப் பணத்தில் இத்தொகை 250 கோடி ரூபாவுக்குச் சமமாகும்.

புகழ்பெற்ற இந்த ஓவியர் 1890 இல் தற்கொலை செய்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது அதற்கு முன்னர் அவர் இந்த ஓவியத்தை வரைந்திருந்தார்! (எ)

### மலையக மக்கள்- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்தில் இருந்து தலவாக்கலை கதிரேசன் கோயிலில் பிரார்த்தனை நடத்தும் நோக்கத்துடன் ஊர்வலமாக சென்றோர் மீதே பொலீஸார் தடியடிப் பிரயோகம் செய்ததாக ஊர்வலத்தில் பங்குபற்றிய ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்த சம்பவங்களினால் தலவாக்கலைப் பகுதியில் போக்குவரத்துச் சேவைகள் நேற்று முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன.

மலையக மக்கள் முன்னணியினர் தமது அங்கத்தவர்கள் பலருக்கு வழங்கப்பட்ட இந்தியக் கடவுச் சீட்டுகளை (பாஸ்போர்ட்டுகளை] நிராகரித்துஅவற்றை ஏற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பினார்கள் என்றும் -

திரு சந்திரசேகரனை கைது செய்யுமாறு கொழும்பில் இருந்து உத்தரவு வந்ததற்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம் எனச் சொல்லப்படுகிறது.

தலவாக்கலையில் பதற்ற நிலை தொடர்வதைத் தொடர்ந்து நேற்று விசேட பொலீஸ் காவல் போடப்பட்டது.

### கொழும்பில் பணிப்பாளர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 17

போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர்களுக்கான விசேட கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 23ஆம் திகதி கொழும்பு சுகாதார அமைச்சில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு தொடர்ந்து நான்கு நாட்களுக்கு நடைபெறும் என்றும் இதில் போதனா வைத்தியசாலைகளின் சேவைகள் பற்றியும் விரிவாக்கங்கள் பற்றியும் கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரும் இந்தக்கருத்தரங்கில் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-40)


## தேவை

நீங்கள் வசீகரமாகப் பேசி, கேட்பவர்களை வசமாக்கக் கூடிய சக்தி உடையவர்களா?

சந்தைப்படுத்தலுக்குத் தேவையான தந்திரோபாயமும், நுணுக்கங்களும் கைவருமா?

அப்படியானால் உடனே விண்ணப்பியுங்கள்.

மாதாந்த சஞ்சிகைகளை பாடசாலைகள், ஆலயங்கள், மற்றும் மக்கள் கூடும் இடங்கள் எல்லாவற்றுக்கும் எடுத்துச் சென்று விற்பனை செய்வதற்கு ஆட்கள் தேவை.

மாதாந்த அலவன்சும் விற்கும் பிரதிகளுக்குத் தக்கபடி கமிஷனும் வழங்கப்படும்.

25. 5. 1990 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

ஆளணி முகாமையாளர்,

நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,

292/2 நாவலர் வீதி,

யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

Spoken English
ஆங்கிலம் பேச வேண்டும் என்ற விருப்பம். ஆனால் தவறாகப் பேசிவிடுவோம் என்ற தயக்கம். இதுதானே உங்கள் பிரச்சினை. உளவியல் ரீதியில் 90 நாட்களில் ஆங்கிலம் பேசும் பயிற்சி.
விபரங்கட்கு:
BRIGHT TRAINING CENTRE
P. O. BOX. 162. COLOMBO, SRI LANKA.

உதயன்

17 - 05 - 1990 வியாழக்கிழமை

Method of Book-keeping
கடை கணக்கு முதல் சம்பனி கணக்கு வரை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதை ஆரம்பத்திலிருந்து தபால் மூலம் கற்றுத்தரப்படும். ஆறு மாத கால Diploma பயிற்சியாகும்.
விபரங்கட்கு:-
BRIGHT TRAINING CENTRE
P. O. BOX. 162, COLOMBO, SRI LANKA.

# தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த மாநாடு ஜூனில்

யாழ்ப்பாணம், மே 17
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த மகாநாடு அடுத்த மாதம் 8, 9 ஆம் திகதிகளில் யாழ் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இதற்கான ஒழுங்குகள் பொதுச் செயலாளர் தலைமையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சங்க நிர்வாகிகளின் குழு ஒன்றினால் கவனிக்கப்பட்டு வருகின்றன.

இக்கூட்டத்தில் இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து வரும் பல்லாயிரக் கணக்கான தமிழர் ஆசிரியர் கலந்து கொள்வார்கள். இம் மகாநாட்டில் மத்திய, மகாண அமைச்சுக்களின் சில அதிகாரிகளும், சில வெளிநாட்டுப் பிரமுகர்களும் பிரதம அதிகாரிகளாகக் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சங்கத்தின் சகல கிளைகளினதும் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து நடாத்தும் புதிய பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில் புதிய நிருவாகிகள் தெரிசெய்யப்படுவார்கள். தற்போதைய நிர்வாகிகள் பலர் தனிப்பட்ட காரணங்களுக்காக தொழிற்சங்க வேலைகளில் இருந்து ஓய்வு பெற விரும்புவதாகவும், புதிய நிர்வாகிகளில் பல புதுமுகங்களைக் காணக்கூடியதாகவும் இருக்குமென சங்கத்தின் சிரேஷ்ட நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.

(உ - எ)

## அடிப்படை உரிமை தொடர்பான
# அரசமைப்புத் திருத்தத்தை ஏற்க அரசாங்கம் மறுப்பு!

கொழும்பு, மே 17
தேசியப் பாதுகாப்பின் நலன்கருதி அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்துவது 'நியாயமான அளவு' ஆக இருக்கவேண்டும் என்று அரசியலமைப்பில் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று எதிர்க் கட்சிகள் விடுத்த கோரிக்கையை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

சர்வகட்சி மாநாட்டில் எதிர்க்கட்சிகள் கூட்டாக இந்த யோசனையை முன்வைத்தன.

அரசியலமைப்பின் 15ஆவது ஷரத்தில் 'நியாயமான அளவு' என்ற சொல் சேர்க்கப்படுவது, நாடாளுமன்றத்தின் இறைமையைத் தடுப்பதாகவும் நிவைவேற்று அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்குக் குந்தகமாகவும் அமையும் என்று அரசாங்கம் கருதுகிறது.

எதிர்க்கட்சியினரின் யோசனைப்படி 'நியாயமான அளவு' என்றசொல் அரசியலமைப்பின் 15ஆவது ஷரத்தில் சேர்க்கப்பட்டால், 'நியாயமற்றமுறையில் தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளது' என்று நம்பும் ஒருவர் நிவாரணம்கோரி நீதிமன்றம் செல்ல வாய்ப்புக் கிடைக்கும் என்று கருதப்படுகின்றது.

இந்த விடயத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து எதிர்க்கட்சியினர் அடுத்த சனிக்கிழமை மீண்டும் கூடவிருக்கும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் மாநாட்டில்பதிலளிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[உ-எ]

## இடையில் கைவிடப்பட்ட
# சாரணர் சமாதான யாத்திரை இன்று சிலாபத்திலிருந்து!

யாழ்ப்பாணம் மே 17
சமாதான செய்திகளை தேசிய வீரர் தினமான இம்மாதம் 22 ஆம் திகதி ஜனாதிபதியிடம் ஒப்படைப்பதற்காக சாரணர்களின் சமாதானப் பாத யாத்திரைக் குழு இன்று வியாழக்கிழமை மீண்டும் சிலாபத்திலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்படும். கிளிநொச்சி மாவட்டத்தினதும் பளை மகா வித்தியாலயத்தினதும் சாரணர் அணி இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

அண்மையில் பளையில் இருந்து சைக்கிளில் ஆரம்பித்த இந்த யாத்திரை, இதில் கலந்து கொண்ட ஒருவர் விபத்தில் சிக்கி மரணமடைந்ததைத் தொடர்ந்து சிலாபத்துடன் இடை நிறுத்தப்பட்டது.

மீண்டும் சமாதான செய்திகளுடன் பளையில் இருந்து சென்ற சாரணர் அமைப்பினர் இன்று சிலாபத்திலிருந்து கொழும்பு நோக்கி நடந்து செல்வார்கள்.

இன்று மாலை நீர்கொழும்பில் தங்கியிருந்து நாளை வெள்ளிக்கிழமை யா-எல நோக்கிப் பயணமாகும் இவர்கள் சனிக்கிழமை கொழும்பை அடைவார்கள்.

20 ஆம் 21 ஆம் திகதிகளில் கொழும்பின் பல்வேறு இடங்களுக்குச் சென்று சமாதான செய்திகளைச் சேகரித்து 22 ஆம் திகதி இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதம ஆணையாளர் மூலமாக ஜனாதிபதியிடம் அவற்றை அவர்கள் கையளிப்பார்கள்.

(உ-7)

எமது இன்றைய புதிய வெளியீடுகள்

[1] சத்தியராஜ் - ரூபினி . கௌதமி நடித்த
ஏ.வி.எம்.மின்
"உலகம் பிறந்தது எனக்காக" [ஒறிஜினல்]

[2] யமுனாவின்
மௌனப் போராட்டம்
[ஒறிஜினல்]

வீடியோ விமல்,
117, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம். [13205]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 17-05-1990இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# வதந்திகளை நம்ப வேண்டாம்
## வவுனியா விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் தினேஸ் அறிக்கை

வவுனியா, மே 17
திட்டமிட்ட ரீதியில் சில தீய சக்திகள் விஷமத்தனமான வதந்திகளை மக்கள் மத்தியில் பரப்பி மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தவும் அதனைப் பயன்படுத்தி தமது துரோகத்தனங்களில் ஈடுபடவும் முயற்சிக்கின்றன. ஆகவே இந்த தீய சக்திகளின் வதந்திகளை நம்பாமல் அனைத்து தமிழ் ஈழ மக்களும் விழிப்பாகச் செயற்படவேண்டும். கடந்த காலங்களில் எமக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பாடமாகக் கொண்டு எதிர்காலத்தில் ஒரு நிரந்தர சமாதானத்துக்காக அனைவரும் உழைக்க வேண்டும்.

வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகள் அரசியல் பொறுப்பாளர் திரு. என். தினேஸ் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக வவுனியாவில் பரவி இருக்கும் வதந்திகள், அதனால் மக்களிடையே ஏற்பட்ட சந்தேகங்கள், பீதி தொடர்பாக இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஒரு பாதையில் ஓரே நோக்கில் சென்றால் நிரந்தரமான சமாதான இலக்கை அடைய முடியும். மக்கள் சக்தி ஒன்றுபட்டு செயற்படும் பொழுது ஏற்படுகின்ற தடைகள் எதுவும் ஒரு பாரிய தடையாக இருக்கமாட்டாது.

கடந்த கால அனுபவங்கள் இதனை எமக்குப் புகட்டியுள்ளன.

ஒற்றுமையே எம் தேசத்தின் உண்மையான விடிவுக்கு வழிகாட்டி என்பதை ஒவ்வொருவரும் நம்பிக்கையோடு உணரும்பொழுது எமது தேசம் விடிவுபெறும்.

நாளை இப்படி நடக்குமென்று வதந்திகளை நம்பி மக்கள் பீதியடையாமல் இன்றைய போக்கு நாளை இப்படித்தான் நடக்கவைக்கும் என்பதை மக்களே தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

அதுவன்றி வதந்திகளை நம்பி வீணாக பீதி அடைய வேண்டிய அவசியமில்லை.

இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## வன்செயல்களினால் பாதிப்புற்ற
# அரசாங்க ஊழியர்களுக்கு அடுத்த மாதம் நஷ்டஈடு!

யாழ்ப்பாணம், மே 17
யாழ் மாவட்டத்தில் வன்செயல் பாதிப்புக்குள்ளான அரசாங்க ஊழியர்களுக்கு நஷ்டஈடு அடுத்த மாதமளவில் வழங்கப்படவிருக்கிறது.

1987 ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்செயல் சம்பவங்களில் இழந்த அரச ஊழியர்களின் குடும்பத்துக்கும் உடமைகளை இழந்த அரச ஊழியர்களுக்குமாக சுமார் ஆயிரம் பேருக்கு இந்த நஷ்டஈடு வழங்கப்படவிருக்கிறது.

இந்த நஷ்டஈடு வழங்குவதற்கு முன்னோடியாக நஷ்டஈடு பெறத் தகுதியுடையோரின் கையொப்பத்துடன் வவுச்சர்களையும், அவரதுவங்கிக் கணக்கு இலக்கத்தையும் அனுப்பும்படி செயலகத்துக்கு புனர்வாழ்வு அமைச்சு பணித்துள்ளது

இந்த விவரங்களை யாழ் அரச அதிபரே உறுதிசெய்து அனுப்ப வேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது (உ-3)

## யாழ். செயலக பதிவாளர் பிரிவுக்கு
# போட்டோபிரதி இயந்திரம் வாங்க நிதி ஒதுக்கீடு செய்க
## எம் பிக்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 17
யாழ். செயலக பதிவாளர் பிரிவுக்கு புதிய போட்டோ பிரதி இயந்திரம் வாங்குவதற்கு எம். பி மார்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்து பணம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப்பிரிவுக்கு போட்டோ பிரதி இயந்திரம் அவசியம் தேவையாக உள்ளது.

தற்போது தேங்கிக் கிடக்கும் சுமார் 25 ஆயிரம் விண்ணப்பங்களையும் விரைவாக கொடுத்து முடிக்க சம்பந்தப்பட்ட பதிவுப் புத்தகங்கள் வந்தால் மட்டும் போதாது போட்டோ பிரதி இயந்திரமும் கட்டாயமாகத் தேவை.

யாழ் செயலகத்தில் இதுவரை காலம் இருந்த இயந்திரம் திருத்தப்படுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது. அது திருத்தப்படாவிட்டால் வாடகைக்கு இயந்திரம் பெற வேண்டிய தேவை ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## உயர்தர மாணவர் ஜனாதிபதிக்கு நன்றி

அண்மையில் நாடு திரும்பிய ஜீ. சீ. ஈ. உயர்தர மாணவர்கள் பத்துப்பேரும் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசவைச் சந்தித்துத் தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டனர்.

இப்பயணத்தின் ஞாபகச் சின்னமாக அவுஸ்திரேலியாவில்இருந்து தாம் கொண்டு வந்த அன்பளிப்புப் பொருட்களை ஜனாதிபதிக்கு அவர்கள் வழங்கினர். (உ-ப)

## வீடமைப்புக் கொடுப்பனவு

மாங்குளம், மே 17
ஒன்றிணைக்கப்பட்ட புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டத்தின் கீழ் முல்லைத் தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு, உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு மாங்குளம் மக்கள் வங்கிக் கிளையில் இன்று வியாக்கிழமை வீடமைப்பதற்கானகொடுப்பனவுகள் வழங்கப்படும். [இ-94)

## அகதிகள் மனு தள்ளுபடி

தமிழ் நாட்டில் காவலில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் 111பேரை விடுவிக்குமாறு தாக்கல் செய்யப்பட்ட மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. (ப)

## வன்செயல் கால பிறப்பு ,இறப்பு
# பதிவுகளைச் செய்வதற்கான 1,300 விண்ணப்பங்கள் தேக்கம்

யாழ்ப்பாணம் மே 17
வன்செயல் காலத்தின் போது இடம் பெற்ற பிறப்பு மற்றும் இறப்புகள் தொடர்பான பிரதிகளைச் செய்வதற்கும் அந்தப் பிரதிகளிலிருந்து சான்றிதழ்களைப் பெறுவதற்குமாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் சுமார் ஆயிரத்து 300 விண்ணப்பங்கள் யாழ் செயலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

ஒரு பிறப்பு அல்லது இறப்பு ஏற்பட்டு மூன்று மாதத்திற்குள் அது சம்பந்தமான பதிவை அந்தப்பகுதி பதிவாளரிடம் செய்து கொள்ளலாம்.

தவறினால், அந்தப் பிறப்பு அல்லது இறப்பு ஏற்பட்டு ஒரு வருட காலத்திற்குள் மாவட்ட பதிவாளரிடம் விண்ணப்பித்து அவரின் சிபாரிசுடன் அத்தகைய பதிவைச் செய்து கொள்ளலாம்.

ஆனால் இறப்பு அல்லது பிறப்பு நிகழ்ந்து ஒரு வருட காலத்தின் பின்னர் பதிவுக்கு விண்ணப்பித்தால், அதனை மேற்கொள்வதில் பல சிக்கல்களை எதிர் நோக்க வேண்டியிருக்கிறதாம்.

இத்தகைய பதிவுகளைச் செய்வதற்கு முதலில் சம்பந்தப்பட்ட மாவட்ட பதிவாளர் பிரிவில் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். இது தொடர்பான பல ஆவணங்களையும் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். பின்னர் இது சம்பந்தமாக விசாரணை ஒன்று நடைபெறும்.

விசாரணை முடிவுற்றதும் அது பற்றிய அறிக்கை கொழும்பு பதிவாளர் நாயகத்துக்குஅனுப்பப்படும். அங்கிருந்து அனுமதி கிடைத்த பின்னரே சம்பந்தப்பட்ட பிறப்பு அல்லது இறப்பு பற்றிய பதிவு செய்யப்படும். இதுவே பொதுவான நடைமுறை.

இவ்வாறு காலம் தாழ்த்திய பதிவுகளுக்கான 1,300 விண்ணப்பங்களே யாழ் செயலகத்தில் தற்போது தேங்கிக் கிடக்கிறது.

இந்த பதிவுகளைச் செய்ய முடியாததால் வன்செயல் காலத்தில் உயிரிழந்த பலரின் குடும்பத்தவர்கள் நிவாரணம் மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவுகளையும் –

பிறந்த குழந்தைகளுக்கான உணவு முத்திரைகளையும் பெற முடியாது கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

# குடிமைத் தொழில் செய்வதை
## சிகை அலங்கரிப்பாளர் நிறுத்துவர்

சிகை அலங்கரிப்பாளர்கள் குடிமைத்தொழில் செய்வதில்லை என்று தீர்மானித்துள்ளனர். இப்போது குடிமைத் தொழிலில் ஈடுபடுவோர் இரண்டுமாத காலத்திற்குள் அதனைக் கைவிட்டுவிடவேண்டும்.

நேற்றுக்காலை யாழ். மனோகராத் திரையரங்கில் நடைபெற்ற சிகை அலங்கரிப்பாளர் சங்கப் பொதுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட மற்றொரு தீர்மானம் வருமாறு:-

10-ஆம் வகுப்புவரை கல்வி பெற்ற இளைஞர்களுக்கே சிகை அலங்காரத் தொழிலைக் கற்றுக்கொடுக்க இனி வரும் காலங்களில் அனுமதிக்கவேண்டும்'.

மேற்கண்ட இருதீர்மானங்களும் பலத்த கரகோஷத்திற்கு மத்தியில் பிரேரிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

கூட்டத்துக்கு சங்கத்தலைவர் திரு சு. இராசேந்திரம் தலைமை வகித்தார்.

பிரஸ்தாபகூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் அமைப்பாளர் திரு. ராஜன் விசேட பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.

அவர் சிகைஅலங்கரிப்பு நிலையங்களில் சுகாதாரம் பேணப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தினார். விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் [illegible] கொண்டு பேசினார்.

# வெடி மருந்து கடத்தி வந்த ஐவருக்கு விளக்க மறியல்
## அவர்களில் மூவர் இந்தியர்கள்

கொழும்பு, மே 17
படகு ஒன்றில் இலங்கைக்குள் வெடிமருந்து மற்றும் பெறுமதியான பொருள்களைக் கடத்திவரமுயன்றயதாகக் கூறப்படும் மூன்று இந்தியர்களையும் இரு இலங்கையர்களையும் விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

கொழும்பு கோட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்ற நீதிவான் மல்காந்தி விக்கிரமநாயக்கா இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

பெங்களூரைச் சேர்ந்த சின்னச்சாமி ராஜா, தமிழ்நாட்டைச் சேர்ந்த சித்தாண்டி பாலன், இராகப்பன் பாலு, மன்னாரைச் சேர்ந்த எஸ். ஆப்தீன், இராசையா குணரத்தினம் ஆகிய ஐவரையும் எதிர்வரும் 23 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

25 கிலோகிறாம் கொண்ட பத்து பெட்டிகள் "ஜெலிக்நைட்", நூறு வெடித்திரிகளைக் கொண்ட பத்துப் பெட்டிகள், மற்றும் பல லட்சம் ரூபாபெறுமதியான புடைவை வகைகள் ஆகியவற்றை நாட்டுக்குள் கடத்தி வர முற்படுகையில் இவர்கள் கடற்படையினரால் கடலில் வைத்துக் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இவர்கள் கடத்திவர முயன்றதாகக் கூறப்படும் உடுபுடைவைகள் குறித்து விசாரணை நடத்திய சுங்கப் பகுதியினர் ஐவருக்கும் தலா ஒரு லட்சம் ரூபா வீதம் அபராதம் விதித்ததாகவும் –

பின்னர் அவர்கள் ஐவரும் மேல் விசாரணைக்காக இரகசியப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

அவர்களை இரகசியப் பொலீஸார் நேற்றுகொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

மேல் விசாரணைகள் நடத்தப்பட வேண்டியிருப்பதால் சந்தேக நபர்கள் ஐவரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிடுமாறு பொலீஸார் நீதிமன்றத்தில் கோரினர், (உ-2)

# புதுக்குடியிருப்பு யாழ். பஸ் சேவை நடத்தகோரிக்கை

புதுக்குடியிருப்பு மே 17
புதுக்குடியிருப்பு மக்களின் நன்மை கருதி, புதுக்குடியிருப்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு பஸ் சேவை ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது பற்றி புதுக்குடியிருப்பு பிரசைகள் குழுத் தலைவர், சிற்றூரவை செயலாளருமான திரு. அ. சண்முகம் கருத்துத் தெரிவிக்கையில், இங்கிருந்து யாழ்ப்பாணம் செல்ல வேண்டியவர்கள் முல்லைத்தீவில் இருந்து வரும் பஸ்ஸிற்கே காத்திருக்க வேண்டியுள்ளது. ஆனால் முல்லைத்தீவிலிருந்து வருகின்ற பஸ் புதுக்குடியிருப்பு வருவதற்கு முன்னரே பிரயாணிகளால் நிரம்பி விடுகின்றது என்றார்.

(இ-126)

# மரண அறிவித்தல்கள்

## திரு' வேலுப்பிள்ளை தங்கேஸ்வரன்

வேலுப்பிள்ளை தங்கேஸ்வரன் 15 – 05 – 90 செவ்வாய் மாலை காலமானார். இவர் சறோஜினிதேவி (சீதா) அவர்களின் அன்புக்கணவரும், மேனகா, வனிதா ஆகியோரின் அன்புத்தந்தையும், வேலுப்பிள்ளை தவமணி அவர்களின் அருமைப்புத்திரனும், சகுந்தலை, ராஜதிரவியம் ஆகியோரின் மருமகனும், தவேஸ்வரன் (நீர்ப்பாசன இலாகா, வவுனியா), ராஜேஸ்வரி, வியலேஸ்வரி, ஜெகதீஸ்வரி, தனேஸ்வரன் (கனடா), ஞானேஸ்வரன் (சுவிஸ்) அவர்களின் அன்புச்சகோதரரும், வினாயகசோதி கட்டடத்திணைக்களம் கொழும்பு) சந்திரராஜா (சீமேந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), சந்திரவதனா ஆகியோரின் மைத்துனரும் செல்வி, குமார், பவளம் (விவேகானந்தா மகாவித்தியாலயம் கொழும்பு). அவர்களின் பெறாமகனும் ஆவார். ஈமக்கிரியைகள்17-5-90காலை 9 – 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக உடுப்பிட்டி வல்லை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

போக்காலை வீதி,
உடுப்பிட்டி.

தகவல்:
வே. தனேஸ்வரன்
[3582)

## தோமஸ்பிள்ளை அலோஸ் வேதநாயகம்
[இளைப்பாறிய ஆசிரியர்]

தோமஸ்பிள்ளை அலோஸ் வேதநாயகம் (இளைப்பாறிய ஆசிரியர், அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை) அவர்கள் 16-05-1990 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற தோமஸ்பிள்ளை – திருமதி அன்னம்மா தம்பதியின் அன்புப் புதல்வரும், மில்றெட் செல்வராணியின் அன்புக் கணவரும், றமேஷ் (லண்டன்), தனுஜா (யாழ். பல்கலைக் கழகம், கலைப்பீடம் 4-ம் வருடம்), ஜெகதீஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு தந்தையும், ஆனந்தி றமேஷ் என்பவரின் மாமனாரும், திருமதி அழகம்மா யோசேப்புவின் மருமகனும், காலஞ்சென்ற சவுந்தரநாயகம், காலஞ்சென்ற அரியநாயகம், திருவாளர் போல் ராசநாயகம், திருமதி ஸ்ரெல்லா போல், அருட்தந்தை மதுரநாயகம், திருமதி குணம் போல் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அருட்திரு. சகாயநாயகம், அருட்திரு. மைக்கல் சவுந்தரநாயகம் ஆகியோரின் சிறிய தந்தையும், அன்ரன் செல்வநாயகம், யூலியற் செல்வமலர், அரியரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 18-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4-00 மணிக்கு நாரந்தனை சம்பேதுரு வானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

நாரந்தனை,
ஊர்காவற்றுறை:

தகவல்:
அருட்தந்தை மதுரநாயகம்
[13204]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org